இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

டிசம்பர் 2023 December | இதழ் 394 Issue

# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991



Premier Canadian Tamil Journal



மாவீரர் யாரோ என்றால்.....கல்வெட்டு

தமிழர் தகவல் 33வது ஆண்டு பூர்த்தி மலருக்கான கட்டுரைகள் இந்த மாதம் 22ம் திகதி வரை ஏற்கப்படும்



ஸ்காபரோவில் முதலாவது மருத்துவக் கல்லூரி



சமூகப் பணியாளருக்கு ஈழநாடு மதிப்பளிப்பு

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

33rd Year வது ஆண்டில்

Growing with the Community ESTD-1991

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

தொலைபேசி:
416 920 9250

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன்கிராஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்
www.tamilsinformation.info

ஆசிரியரிடமிருந்து... From the Editor

# பகற்கொள்ளையர்!

இலங்கை அரசியல் என்பது எப்போதுமே ஊழல் நிறைந்தது. இதன் உச்சமான காலகட்டம் தமிழரின் உரிமைப் போராட்ட காலமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் மகிந்த ராஜபக்ச 'தர்பார்' ஆட்சி நடத்திய காலத்தில் ஆயுதக் கொள்வனவு, படையினருக்கான உணவு, உடை விநியோகம் என்ற பெயர்களில் இடம்பெற்ற நிதிக் கையாடல் கோடிக்கணக்கானது.

இதற்கென உலக நாடுகளிடமிருந்து பெறப்பட்ட நிதியுதவிகள் இலங்கைக்குச் சென்று சேராமல் இடைநடுவில் வழிமாற்றப்பட்டு இராஜ-பக்சக்களின் சொத்தாக வெளிநாடுகளில் பதுக்கப்பட்டது.

இரண்டு டசினுக்கும் மேலான ராஜபக்ச குடும்பமே நாட்டின் வரவு செலவுத் திட்டத்தில் எண்பது வீதத்துக்கும் மேலான நிதியை கையாண்டதால், 'அண்ணை பிடி தம்பி பிடி' என்ற பகற்கொள்ளைக்கு வித்திட்டது.

இலங்கை அரசியலில் ராஜபக்ச சகோதரர்களின் சீத்துவக்கேடு பற்றி அவர்களுடன் அங்கம் வகித்தவர்கள்கூட நன்கு அறிந்திருந்தனர். இதனால் அவர்களும் கொஞ்சம் அள்ளிக் கொள்ளட்டும் என்ற பரோபகார சிந்தனையில் ராஜபக்சக்கள் நடந்து கொண்டது பகிரங்க ரகசியம்.

அரசியல் அறம் என்றால் என்னவென்று அறவே தெரியாத கோதபாயவை, தமது மகன் நாமலுக்கு வயது வரும்வரை 'இடைக்கால' ஜனாதிபதியாக்கியவர் மகிந்த. இவர்களுள் மறைந்திருந்து தம்மிஷ்டப்-படி 'கமிஷன்' பெற்று கோட்டை மேல் ஏறியவர் 'பதினைந்து வீதம்' என்ற புகழ் பெற்ற பசில்.

அறகலய இவர்களுக்கு கூண்டோடு பாடம் கற்பித்தது. இவர்களில் எவருமே பதவி வகிக்காத அரசாட்சி கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக இலங்கையில் தடம் பதித்து வருகிறது. ஆனால், இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு மூன்று ராஜபக்சக்களுமே மூலகாரணமென உச்ச நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு வழங்கி நாட்டையே அதிர்ச்சிக்குள்-ளாக்கியுள்ளது. இதனால் மூன்று ராஜபக்சக்களினதும் குடியுரிமை ரத்துச் செய்ய வேண்டுமென்ற குரல் நாட்டில் மேற்கிளம்பியுள்ளது.

1980ல் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசியல் பழிவாங்கலாக சிறீமாவோ பண்டாரநாயக்க, பீலிக்ஸ் டயஸ் பண்டார-நாயக்க, நிஹால் ஜெயவிக்கிரம ஆகியோரின் குடியுரிமைகளை ஏழாண்டுகள் பறித்ததை உதாரணமாகக் கொண்டு மூன்று ராஜபக்சக்களதும் குடியுரிமை ரத்துச் செய்யப்பட வேண்டுமென எதிர்க்கட்சிகள் தனித்தனியாகக் கேட்டுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதற்கென பொதுமக்கள் கையொப்பம் சேகரிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார். பந்து இப்போது ரணிலின் காலுக்குள் நிற்கிறது.

வலுவானதாயுள்ள வாய்ப்பை இவர் எவ்வாறு 'விளையாடப்' போகிறார்?

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

**E-mail**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
R. R. Rajkumar

**Public Relation**
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

**Website**
www.tamilsinformation.info

# 2024ல் கனடிய பொதுத்தேர்தல்?




கனடாவுக்கான அடுத்த பொதுத்தேர்தல் அடுத்த ஆண்டில் நிச்சயம் இடம்பெறுமென கனடிய பிரதான மைய ஊடகங்கள் தொடர்ந்து தெரிவித்து வருகின்றன. 2021 செப்டம்பர் 20ம் திகதி கடைசியாக பொதுத்தேர்தல் இடம்பெற்றது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவையே தேர்தல் நடைபெற வேண்டுமாயினும், அதனை முற்கூட்டியே நடத்த வேண்டிய நெருக்கடி நிலையில் லிபரல் கட்சி இருப்பதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைய கருத்துக் கணிப்புகள் பிரதமர் ஜஸ்ரின் ரூடோவின் மக்கள் செல்வாக்குச் சரிவையும், லிபரல் கட்சி மீதான மக்கள் ஆதரவு வீழ்ச்சியையும் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றன. இவ்வேளையில் தமது மூத்த அமைச்சர்கள் இருவரை அடுத்த தேர்தல் பணிகளுக்கென ஜஸ்ரின் ரூடோ நியமித்திருப்பது அடுத்த வருட தேர்தலுக்கான முன்னெடுப்பென மற்றைய அரசியல் கட்சிகள் கருதுகின்றன.

2015 அக்டோபர் 19ம் திகதி பொதுத்தேர்தலில் ஜஸ்ரின் ரூடோ முதன்முறையாக பிரதமர் பதவிக்குத் தெரிவானார். இத்தேர்தலில் லிபரல் கட்சி நூற்றைம்பது ஆசனங்களில் வெற்றி பெற்று பெரும்பான்மை அரசாக ஆட்சிபீடம் ஏறியது. ஆனால், 2019, 2021 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்களில் சிறுபான்மை அரசாகி, என்.டி.பி.யின் ஆதரவுடன் ஆட்சி நடத்தி வருகின்றது.

மூன்று தேர்தல்களின் ஊடாக தொடர்ந்து எட்டு ஆண்டுகள் இதுவரை பிரதமராக இருந்த ஜஸ்ரின் ரூடோவை பதவி விலகுமாறு லிபரல் கட்சியின் முக்கியஸ்தர்கள் பகிரங்கமாக வேண்டி வருகின்ற போதிலும் இவர் அதனை மறுத்து வருகிறார்.

# கனடாவின் வந்தேறுகுடிகள் பொருளாதார நெருக்கடி நிமித்தம் பெருமளவில் குடிபெயர்கின்றனர்!

## Immigrants increasingly leaving Canada

கனடாவில் சுயவிருப்பத்துடன் குடியேறிய வெளிநாட்டவர்கள் (வந்தேறுகுடிகள்) கனடாவை விட்டு பெருமளவில் வெளியேறி வருவதாக புள்ளிவிபரங்களூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய பொருளாதாரத்துடன் இணைந்து இயங்க முடியாத நிலைமை, இனவாதம், வீடுகளை சொந்தமாக்குவதில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி, மாதாந்த அடமான தொகையை செலுத்த முடியாமை போன்ற நெருக்கடிகளே இவர்களின் வெளியேற்றத்துக்கான காரணமென கண்டறியப்பட்டுள்ளது. கனடாவைவிட மற்றைய சில நாடுகளில் பொருளாதார நிலை வாழ்வதற்கு சாதகமாகவும், வேலை வாய்ப்பு, போதிய வருமானம் என்பவை இலகுவாக இருப்பதுமே இவர்களின் வெளியேற்றத்துக்கு முக்கிய காரணமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017ம் ஆண்டுக்குப் பின்னரே அதிகூடிய வெளிநாட்டவர் கனடாவிலிருந்து வெளியேறியுள்ளனர். தேசிய சராசரியாக 2019ம் ஆண்டு வரையான இரண்டு வருடத்தில் 31 சதவீதத்தில் வெளியேறியோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சமவேளையில், வெளிநாட்டவர்களை பல்வேறு வகையினராக கனடாவில் குடியேற அனுமதிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இருப்பினும், தற்போது ஏற்பட்டுள்ள வீட்டு வசதி நெருக்கடி, வாடகை அதிகரிப்பு போன்ற காரணங்களை முன்னிறுத்தி சில அடிப்படை மாற்றங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2026ம் ஆண்டுவரையான மூன்றாண்டுகளில் 1.5 மில்லியன் புதிய நிரந்தரக் குடிவரவாளர்களை கனடா உள்வாங்க உள்ளது. ஏற்கனவே கனடாவில் இருப்பவர்களில் நிரந்தரக் குடியுரிமைக்கு (Permanent Residents) விண்ணப்பித்துக் காத்திருப்பவர்களின் எண்ணிக்கையும் இதற்குள் அடங்கும்.

கனடாவை விட்டு வேகமாக வெளியேறி வரும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கையை நிரப்பவும், அத்தியாவசியப் பணிகளுக்கான ஆட்குறைப்பை நீக்கவும் புதிய இலக்கு உதவலாமென குடிவரவுத் திணைக்களம் நம்புகிறது.

அதிகரித்து வருகின்ற வாழ்க்கைச் செலவு, பணிகளுக்கான எதிர்பாராத போட்டி, வீடுகளைக் கொள்வனவு செய்வதற்கான நிதி நெருக்கடி, வாடகைக் குடியிருப்புகளை ஏற்படுத்துவதற்குத் தேவையான நிதித்தேவை அதிகரிப்பு போன்றவைகளைக் கவனத்தில் எடுத்து, பொருளாதார குடிவரவாளர்களை தெரிவு செய்ய ஆலோசிக்கப்படுகிறது.

வெளிநாட்டவர்களை கனடாவில் குடியேற அனுமதிக்கும் வேளையில் நான்கு வகைகளுக்குள் அவர்களை அடக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. பொருளாதார வசதிக் குடிவரவாளர்கள், குடும்பங்கள் மீள இணைக்கப்படுபவர்கள், அகதிகள் மற்றும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள், மனிதாபிமான கருணை அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்கள் என இவர்கள் அடங்குவர்.

இவர்களுள் பொருளாதார வசதி அடிப்படையில் 2024ம் ஆண்டில் 281,135 வெளிநாட்டவர் தெரிவாவர். 2025ம் ஆண்டில் 301,250 என்ற எண்ணிக்கையினர் தெரிவாவர். இதே தொகையே 2026ம் ஆண்டிலும் நடைமுறையிலிருக்கும்.

### சர்வதேச மாணவர் விசாவுக்கு புதிய நடைமுறை

இன்னொரு புறத்தில் சர்வதேச மாணவர்களுக்கு விசா வழங்கும் விடயத்தில் இறுக்கமான நடைமுறையை குடிவரவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சர்வதேச மாணவர்களுக்கு அனுமதி வழங்கும் கனடிய கல்வி நிறுவனங்கள் வரவிருக்கும் மாணவர்களின் ஆவணங்களை கல்லூரி அனுமதிக் கடிதத்துடன் முற்கூட்டியே குடிவரவுத் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட பிரிவுக்கு அனுப்ப வேண்டும். மோசடியான மாணவர் விசாக்களைத் தடுப்பதற்கு இந்த நடைமுறை உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வருட முற்பகுதியில் ஆயிரக்கணக்கான இந்திய மாணவர்கள் மோசடியான விசாக்களூடாக கனடா வந்தனர். இவர்களுக்கு வழங்கப்பட்ட கல்லூரி அனுமதிக் கடிதங்கள்



எஸ்தி

(மறுபக்கம் வருக)



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

உலக சனத்தொகையில் சுமார் நாற்பது வீதமானோர் (3.5 மில்லியன்) அரிசியை பிரதான உணவாகப் பயன்படுத்துகின்றனர். சோறினால் தயாரிக்கப்படும் இந்த உணவுகளுக்கு பல நாடுகள் தமக்கென தனித்தனியான பெயர்களை வைத்துள்ளன. இத்தாலி Rositto, ஜப்பான் Sushi, அமெரிக்கா Cajan Jambalaya என்ற பெயர்களை சோற்றுப் பண்டங்களுக்கு வைத்து உணவகங்களில் பெருமளவில் விற்பனை செய்கின்றன. சோற்றினை சமச்சீராகச் சாப்பிட்டால் பொல்லாங்கு ஒன்றுமில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா சுமார் எழுபது முதல் எண்பது வரையான பறவைகளுக்கு இந்த வருடம் புது நாமம் சூட்டியுள்ளது. அமெரிக்காவின் வரலாற்றில் பெருமை மிக்கவர்களின் பெயர்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. Cooper Hawk, Says Phoebe, Stellens Jay, Wilsons Snipe, Lincolns Sparrow என்பவை புதிய நாமம் சூட்டப்பட்ட சில பறவைகள். அடுத்த ஆண்டில் கனடாவுடன் இணைந்து மேலும் இருபது பறவைகளுக்கு புதிய நாமம் சூட்டப்படவுள்ளது.

இந்தியாவில் சுமார் இரண்டு மில்லியன் இந்து ஆலயங்கள் இருப்பதாகவும், இதில் ஏறத்தாழ 23,000க்கும் அதிகமானவை வாரணாசி ஆற்றங்கரையை அண்டியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. பஃரைய்ன், லற்விய, இஸ்ரோனியா நாடுகளில் வசிக்கும் மக்களின் தொகையை விட இந்தியாவிலுள்ள இந்து ஆலயங்களின் எண்ணிக்கை அதிகமானது. இந்தியாவின் சனத்தொகையில் சுமார் எண்பது வீதமானவர்கள் இந்துக்கள். இங்கு சுமார் மூன்று லட்சம் பள்ளிவாசல்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒன்ராறியோவில் வசிக்கும் சுமார் 12 மில்லியன் ஆட்களில் ஏறத்தாள இரண்டு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் குடும்ப வைத்தியர் இல்லாதிருப்பதாக நோயாளர் குறைகேள் அதிகாரி அலுவலகம் அறிவித்துள்ளது. நோயாளர் சிகிச்சைக் குறைபாடுகள் தொடர்பான முறைப்பாடுகள் கடந்த ஆண்டில் 33 வீதத்தால் அதிகரித்துள்ளதாகவும், மருத்துவமனைகள் தொடர்பாக 2264 புகார்களும், நீண்டகால பராமரிப்பு மற்றும் சமூக பராமரிப்பு தொடர்பாக 600க்கும் அதிகமான புகார்களும் அலுவலகத்துக்குக் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பன்னிரண்டு வயது மாணவன் அவன். வகுப்பாசிரியர் கொடுக்கும் வீட்டுப் பாடவேலைகளை ஒருபோதும் செய்வதில்லை. ஒரு நாள் ஆசிரியர் அவனை தனிமையில் அழைத்து காரணம் கேட்டார். “நோயாளியான அம்மா, மனநலம் பாதிக்கப்பட்டிருக்கும் பாட்டி ஆகியோரைப் பராமரிப்பது, தினமும் மதுபோதையில் வீடு திரும்பும் அண்ணனுடன் மல்லுக்கட்டுவது என்று நேரமே போகிறது....” என்று தொடர்ந்தான் மாணவன். அவனின் நிலைமையைப் புரிந்த ஆசிரியர் அனுதாபம் கொள்வதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்? இங்கிலாந்தின் வற்ஃபோரன் நகரிலுள்ள பாடசாலை ஒன்றில் கடந்த மாதம் இது நிகழ்ந்தது.

சீன நிறுவனமான கோசியா யப்பானின் ஹிட்டாசியுடன் இணைந்து பருத்திப் பஞ்சினால் தயாரான பி.ஜே.பி. வகைப் பற்றரிகளை பயன்படுத்தும் எலெக்ரிக் மோட்டார் சைக்கிளை உருவாக்கி சாதனை படைத்துள்ளது. 2024ம் ஆண்டில் யப்பானில் இது விற்பனைக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த எலெக்ரிக் சைக்கிள்களின் அதிகபட்ச வேகம் மணித்தியாலத்துக்கு ஐம்பது கிலோமீற்றராக இருக்கும். ஒரு தடவை இதன் பற்றரியை சார்ஜ் செய்தால் 70 கிலோமீற்றர் தூரத்துக்குப் பயணம் செய்யலாம்.

## ஒன்ராறியோவின் லெப்ரினன்ட் கவர்னராக பிரெஞ்ச் மொழியின பெண்



ஒன்ராறியோ மாகாணத்தின் லெப்ரினன்ட் கவர்னராக எடித் டுமொன்ற் என்ற பெண்மணி கடந்த மாதம் பதவியேற்றார். பிரெஞ்ச் மொழியினத்தைச் சேர்ந்த ஒருவர் இப்பதவியை ஏற்றிருப்பது இதுவே முதல் தடவை. கனடிய மாகாணங்களில் அதிகமான பிரெஞ்ச் மொழி இனத்தவர் ஒன்ராறியோ மாகாணத்திலேயே வசிக்கின்றனர். இங்கு வசிக்கும் சுமார் ஆறு லட்சம் பிரெஞ்ச் மொழி இனத்தவர்களில் அறுபதாயிரம் வரையானவர்கள் ரொறன்ரோ மாகாணத்தில் வசிக்கின்றனர். இந்த மாகாணத்தின் நாற்பதாவது லெப்ரினன்ட் கவர்னராகப் பதவியேற்றிருக்கும் எடித் டுமொன்ற் இப்பதவியை வகிக்கும் நான்காவது பெண்மணி என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மனிற்றோபா முதல்வராக முதற்குடியின பிரதிநிதி



மனிற்றோபா மாகாண சட்டசபைக்கு கடந்த மாதம் இடம்பெற்ற தேர்தலில் என்.டி.பி. வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது. இதன் தலைவரான Wab Knew புதிய முதல்வராக பதவியேற்றுள்ளார். இவரே இப்பதவியை வகிக்கும் முதற்குடியினத்தைச் சேர்ந்த முதலாமவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கனடாவின் வந்தேறுகுடிகள்....

போலியானவையாக இருந்ததால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாது நெருக்கடிக்குள்ளாகினர். கனடாவில் இயங்காத கல்வி நிலையங்களின் கடிதத் தலைப்பில் இந்த மாணவர்களுக்கு அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டது பின்னர் தெரியவந்தது.

இந்த நிலைமை தொடராமல் இருக்க குடிவரவுத் திணைக்களம் புதிய நடைமுறையை அறிவித்துள்ளது. இதன் வழியாக மோசடி அனுமதிகள் தடுக்கப்படலாமெனவும், கல்வி கற்பதை நம்பி வரும் மாணவர்கள் ஏமாற்றத்துக்குள்ளாகாது இருக்கலாமெனவும் குடிவரவுத் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.


பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்



# ஏன் சில நாடுகள் தோல்வியடைகின்றன?

**ஊரும் உலகும் - 22**

பத்து வருடங்களுக்கு முன் வெளிவந்த இந்த நூலுக்கு அன்று கிடைத்த வரவேற்பும் பாராட்டும் இன்றுவரை தொடர்வது ஆச்சரியமானதல்ல. கறுப்பு-வெள்ளை, கிழக்கு-மேற்கு, இடதுசாரி - வலதுசாரி, வளர்ந்தோர் - வீழ்ந்தோர், அமெரிக்கர்-ஆபிரிக்கர், ஆசியர்-ஐரோப்பியர் என்ற முரண்பாடுகளை அகற்றி, பரந்த உலக நோக்குடன் பொருண்மிய அரசறிவியல் கருவூலங்களை மிகவும் நேர்த்தியாக மீளாய்வு செய்துள்ள சிறந்த நூல் இது.




“சில நாடுகள் தோல்வியடைவது ஏன்?” என்பதை தலைப்பாகக் கொண்ட இந்தநூல் அன்றாட உணவுக்காய் அல்லல்படும் எளிய மக்களின் வாழ்வை மனம் கொண்டு சிந்தனைச் செழுமையுடன் வரையப்பட்ட ஓர் ஒப்பற்ற சமூக ஓவியம். சில நாடுகளை வறுமையின் வாசலில் வைத்து வயிறு வளர்க்கும் அறமற்ற தலைவர்களுக்கு கசப்பான மருந்து.

இன்றைய உலகிலே சில நாடுகள் வல்லமையும், வளர்ச்சியும் வசதிகளும் நிறைந்து வளர, ஏனையவற்றில் பசி, பஞ்சம், பட்டினி, நோய், வறுமை போன்றவை மக்களை வாட்டுவது ஏன்? இதற்கான காரணி கலாசாரமா காலநிலையா புவியியல் நிலஅமைப்பா காலனித்துவ எச்சசொச்சங்களா விதியின் விளையாட்டா? இல்லவே இல்லை! அரச தலைமைகளின் சுயநலமும் அவை வளர்த்த பிரிவினை நிறைந்த நிறுவனக்கட்டமைவுகளின் அவலமான சீர்கேடுகளுமே என்பது நூலசிரியர்களின் உறுதியான கருத்து.

ஆபிரிக்க நாடுகளான சிம்பாப்வே, கொங்கோ மற்றும் சியரா லியோன் போன்றவை வறுமையிலும் வன்முறையிலும் சிக்கித் தவிக்கும் போது போட்ஸ்வானா ஏன் உலகில் மிகவேகமாக வளரும் நாடாக மாறியுள்ளது? இதை விளக்குவது எவ்வாறு? வட மற்றும் தென்கொரியா இரண்டுமே ஒர் இனம், ஒரே மொழி, சமமான காலநிலை, நில அமைப்பு. இருப்பினும் வடகொரியா பூமியில் மிகவும் ஏழ்மையான நாடுகளில் ஒன்று. ஆனால் தென்கொரியா பொருளாதார வாய்ப்பும் செல்வச் செழிப்பும் மிக்க சமூகத்தை உருவாக்கியுள்ளது. நாட்டின் வளர்ச்சியில் அனைவரையும் பங்கேற்க அனுமதித்தது. எனவே தவறு எங்குள்ளது என கூர்மையாக ஆராய வேண்டும்.

மக்களின் மேம்பாடு, நாட்டின் முன்னேற்றம் என வளர்ந்த நாடுகளிடம் அறாவட்டிக்கு பெற்ற கடனில் பெரும் பகுதியை சுரண்டியும் பதுக்கியும் பிற நாடுகளில் வைப்பில் இட்டு வளரும் பணமுதலைத் தலைமைத்துவத்தின் சீர்கேடு ஒரு முக்கிய காரணம் என இந்த நூல் சுட்டி நிற்கின்றது.

தமது இருபது ஆண்டு ஆய்வுகளை இரண்டு பேராசிரியர்கள் இந்த நூலில் ஒன்றாகத் திரட்டியுள்ளனர். நூலாசிரியர் டரோன் அசெமோக்லு அமெரிக்காவின் புகழ்மிக்க மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் (MIT) பொருண்மியவியல் பேராசிரியர். நூலின் இணைஆசிரியர் ஜேம்ஸ் ஏ. ராபின்சன் ஹார்வர்ட் பல்கலைக்கழக அரசறிவியல் பேராசிரியர். இவர்களின் நூல்கள் உலகின் முன்னணிப் பல்கலைக்கழகங்-களில் மாணவர் தேடிப்படிக்கும் பாடநூல்கள். இருவருமே தென்னாபிரிக்காவிலும், போட்ஸ்வானா, மொரிஷியஸ், சியரா லியோன் போன்ற நாடுகளிலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் ஆய்வுப் பணியாற்றிய பட்டறிவு உடையவர்கள்.

20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வரலாற்றின் பெரிய மனிதர்கள் எனப் போற்றப்படும் ஒரு சிலரின் தேசிய வளர்ச்சிக்கான பங்களிப்புகளையும் இந்த நூல் துலக்-கமாக தூக்கி நிறுத்தியுள்ளது. குறிப்பாக போட்ஸ்வானா நாட்டின் செரிட்சே காமாவை தலைவராகப் பெற்றமை அந்த நாட்டின் மாபெரும் அதிர்ஷ்டம் என அடித்துக் கூறுகிறது. அதே தொனியில் சிம்பாப்வேயின் றோபர்ட் முகாபே அல்லது கொங்கோவில் உள்ள மொபுடுவைப் போலல்லாமல், பன்மைப் பாங்கை உள்ளடக்கும் பரந்த மனதுடன் அரச நிறுவனங்களைக் கட்டமைத்தமையே போட்ஸ்வானாவின் துரித வளர்ச்சிக்கு வழிசமைத்தது எனவும் இன்னும் முற்றிலும் மாறுபட்ட அரச நிறுவனப் பாதைகளை உருவாக்கியமையே வட - தென் கொரியாக்களுக்கு இடையிலான வேறுபாடுகளின் காரணிகள் என்பதும் இவர்களின் வாதம்.

ஆனால் தூரதரிசன வீச்சுடன், துணிவான ஆளுமையும் ஆழமான சிந்தனையையும் கொண்ட தலைவர்களின் தனித்தத்துவ வகிபாகம் ஒரு நாட்டை உன்னத நிலைக்கு உயர்த்தும் என ஆதாரங்களுடன் நூலாசிரியர்கள் நிறுவியுள்ளனர்.

நேர்மையான சுதந்திரமான சமத்துவமான பன்மைத்தன்மையான ஆரோக்கியமான சமூகத்தை அரச நிறுவன இயந்திரத்தின் உதவியுடன் ஊக்கி வளர்க்கும் நாடுகள் மட்டுமே உண்மையான கூரிய கண்டுபிடிப்புகளையும் ஆக்கப்பூர்வமான வளர்ச்சித் தொடர்ச்சியையும் கொண்டு விளங்கும் என இந்த நூல் விரித்துரைக்கின்றது.

மக்களை இன, மத, மொழி வாரியாகவும் கற்றவர் மற்றவர், பணக்காரர் வறியவர் எனவும் பிரித்துவைக்கும் நாடுகளில் மேற்கத்திய நாடுகளில் காணப்படுவது போன்ற நீடித்த, நிலையான வளர்ச்சி சாத்தியமற்றது எனக் கூறி அடக்கு முறைகளையும், அதிகார ஆணவத்தையும் முன்னிறுத்தி கடுகதியில் வளர்ந்த சீனா உள்ளிருந்தே கொல்லும் வியாதிபோல் பிரிவினை சக்திகளாலும், விளிம்பு நிலையில் விலத்தி வைக்கப்பட்ட வறிய மக்களின் எழுச்சியாலும் விரைவாகவே வீழ்ந்துவிடக்கூடும் என எதிர்வு கூறியுள்ளமை இந்த நூலில் உன்னிப்பாய் உற்றுநோக்கத்தக்கது.

காலனித்துவ ஆட்சி அகன்று 75 வருடங்களின் பின்னும் இலங்கையில் ஒரு ஆட்சிநிபுணன் (Statesman) இற்றைவரை அடையாளம் காட்டப்படாமை இந்த நாட்டின் தலையற்ற தலைமையின் வெறுமையையே அப்பட்டமாக காட்டுகின்றது. நூலின் கேள்விக்கு இலங்கை பச்சையான ஓர் உதாரணம். ஆட்சியை என்றும் தமதாகத் தக்கவைப்பதே அரசியல் எனப் பதவிநோய் பிடித்து அலைபவர்க-ளுக்கு இந்த நூல் ஒரு சர்வரோக சஞ்சீவி.



அ. முத்துலிங்கம்

# இரண்டு டொலர்

அமெரிக்காவில் மோசமான இடம் ஒன்றில் நம்பர் 498 பஸ்சுக்கு நான் தனியாக காத்து நின்றேன். நாலாவது வேலையும் போய்விட்டது. அன்று ஒரு கம்பனி என்னை நேர்முகத் தேர்வுக்கு வரச் சொல்லியிருந்து. இரண்டு மடங்கு சம்பளம். சொன்ன நேரத்துக்குள் நான் நேர்முகத்தேர்வுக்கு போய்ச் சேரவேண்டும். அதுதான் முக்கியம். எனக்காக கம்பனி காத்திருக்காது.

பஸ்சில் இதே பாதையில் பலமுறை போயிருக்கிறேன். குறித்த நேரத்தில் பஸ் இலக்கை அடைவது கிடையாது. போவதற்கு இரண்டு டொலர், திரும்புவதற்கு இரண்டு டொலர் என்பது கணக்கு. என்னுடைய மதிய உணவுக்காக நான் சேமித்து வைத்த காசு இது. வேலை முக்கியமா, மதிய உணவு முக்கியமா என மனதுக்குள் விவாதம் நடந்தது. கைக்கடிகாரத்தைப் பார்த்தேன். பஸ்சில் அடிக்கடி சின்னச் சண்டைகள் உண்டாகி பஸ் தாமதமாகிவிடும். கவலையாகவிருந்தது. பஸ் வந்தது.

இரண்டு டொலரை பஸ் சாரதியிடம் தந்துவிட்டு வசதியான இடம் பிடித்து அமர்ந்தேன். எனக்குப் பக்கத்தில் இருந்தவர் கையில் பிடித்த கடுதாசிக் குவளை காப்பியை குடிக்காமல் அதையே பார்த்துக் கொண்டிருந்தார். அவர் கைவிரல்களில் வரிசையாக வெள்ளி மோதிரங்கள். மற்றப் பக்க இளைஞன் இரண்டு பெருவிரல்களாலும் செல்பேசியில் படுவேகமாக குறுஞ்செய்திகள் அனுப்பியவண்ணம் இருந்தான். நேர்முகத்தில் என்னுடைய புகழ்பற்றி என்னவென்ன சொல்லலாம், என்னவென்ன சொல்லக்கூடாது என்பது பற்றி ஆழ்ந்து சிந்தித்தேன்.

ஒவ்வொரு தடவையும் தவறாமல் "எதற்காக கடைசி வேலையை விட்டீர்கள்?" என்பறு கேட்பார்கள். "16 கோப்பைகளை உடைத்தேன்" என்று சொல்லமுடியுமா? அமோகமான கற்பனை ஒன்றுதான் என்னைக் காப்பாற்றும்.

பஸ்சிலே 'கஞ்சா உருட்ட அனுமதியில்லை' (No weed rolling) என்று எழுதி வைத்திருந்தது. யாராவது கடைசி ஆசனத்தில் இருந்து கஞ்சா உருட்டி புகைக்க ஆரம்பித்தால் ஓட்டுநருக்கும் உருட்டுநருக்கும் இடையில் சண்டை மூண்டு பஸ் தாமதமாகிவிடும். அன்றைய சாரதி கறுப்பு இனத்து பெண். கறள் நிறம். பார்வைக்கு கண்டிப்பானவராக தெரிந்தார். கடைசி சீட்டில் கஞ்சா உருட்டுபவர் ஒருவருமில்லை. ஒரு பெண்ணை மட்டும் ஒருவன் உருட்டிக்கொண்டிருந்தான்.

அடுத்த நிறுத்தத்தில், கையில் குழந்தையையும், மறுகையில் பையையும் காவியபடி செல்பேசியை வாயினால் கவ்விக்கொண்டு ஒரு பெண் ஏறி இருக்கையில் அமர்ந்தார். சரி, நேரத்துக்கு போய்ச் சேர்ந்துவிடலாம் என்று நிம்மதி ஏற்பட்டது. ஒரு புதுவிதமான பிரச்சினை அன்று உருவாகப் போகிறது என்பது எனக்குத் தெரியாது.

அடுத்துவந்த பஸ் நிறுத்தத்தில் ஒருவர் சக்கர நாற்காலியில் பேருந்துக்காக காத்து நின்றார். சரி, ஐந்து நிமிடம் போய்விடும். சாரதி பஸ்சை நிறுத்திவிட்டு கதவை திறந்து இறங்கு பலகையை இறக்கினார். அது ஆடி அசைந்து கீழே இறங்கி நிலத்துடன் ஒட்டிக்கொண்டு வளைந்து நின்றது. பயணி தன்னுடைய தானியங்கி நாற்காலியை பலகைக்கு நேராகக் கொண்டுவந்து மெல்ல மெல்ல ஏறத் தொடங்கினார். உள்ளே வந்ததும் சாரதி தன் ஆசனத்தை விட்டு எழுந்து ஊனமுற்றோருக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் நாற்காலியை நிறுத்தி, சாவதானமாக ஒரு சங்கிலியால் பிணைத்துக் கட்டினார். நேரம் ஓடியது. நான் கைக்கடிகாரத்தைப் பார்த்தேன்.

பஸ் புறப்படவில்லை. ஓட்டுநர் தலையை குனிந்து பயணி கொடுக்கப்போகும் இரண்டு டொலருக்காக காத்து நின்றார். பயணி நாற்காலியை நிறைத்து உட்கார்ந்திருந்தார். அவர் தொப்பை கீழே இறங்கி தொடையில் கிடந்தது. அவர் அமர்ந்திருந்தது நாற்காலியல்ல, அவருடைய வீடு. கைப்பிடியில் இரண்டு மூன்று உடுப்புகள் தொங்கின. ஆசனத்துக்கு கீழே அத்தியாவசியமான சாமான்கள். அவர் அணிந்திருந்த உடுப்பில் எட்டு பக்கெட்டுகள். அவர் காசைத் தேடத் தொடங்கினார். ஒவ்வொரு பக்கெட்டாகத் தேடியும் காசு கிடைக்கவில்லை. பின்னர் நாற்காலி கைப்பிடியில் கொழுவிய உடுப்புகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்தார். அங்கேயும் காசு இல்லை. சாரதி கண்களை மூடிக்கொண்டு பொறுமையாக நின்றார். ஏனைய பயணிகள் தங்கள் தங்கள் ஆசனங்களில் நெளிந்தனர். மேலும் பல நிமிடங்கள் ஓடின.

அங்கே நடக்கும் சம்பவங்களை எல்லாம் பஸ்சில் பொருத்திய வீடியோ காமிரா படம் பிடித்துக் கொண்டிருந்தது. எவ்வளவு நேரம்தான் இவர் பக்கெட்டுகளை ஆராய்வார். இறுதியில் ஏதோ கொசு கடித்ததுபோல உடம்பின் கீழ்ப்பாகத்தை மெல்ல ஆட்டினார். நான் என் முகத்தை பஸ் யன்னலில் பார்த்தேன். பதற்றமாகத்தான் தென்பட்டது. காசு இல்லை என்று நிச்சயமானதும் சாரதி சங்கிலி பூட்டை திறந்து பயணியின் நாற்காலியை விடுவித்து, பஸ் கதவை திறந்தார். இறங்கு பலகை மெதுவாக ஆடி அசைந்து இறங்கி நிலத்தை தொட்டு நின்றது. பயணி சாவகாசமாக தன்னுடைய சக்கர நாற்காலியை இயக்கி, லாவகமாகத் திருப்பி நிலத்தை கண்டடைந்தார். சாரதி மறுபடியும் விசையை அமர்த்தி பலகையை உள்ளே இழுத்தார். கதவை பூட்டினார். மேலும் பல நிமிடங்கள் கடந்தன.

மறுபடியும் பஸ் கிளம்பி சிறிது தூரம் நகர்ந்திருக்கும். நாற்காலி பயணி கைகளை மேலே தூக்கி ஆட்டி 'இரண்டு டொலர், இரண்டு டொலர்' என்று கூவினார். இத்தனை நேரமும் அவர் கையில் இரண்டு டொலர் இருந்ததை மறந்துவிட்டார். பஸ் சாரதி ஒரு கணம்கூட யோசிக்காமல் பஸ்சை நிறுத்தி கொஞ்சம் பின்னுக்கு நகர்த்தி கதவை திறந்தார். இறங்கு பலகையை இறக்கினார். அது மெல்ல அசைந்து அசைந்து இறங்கி நிலத்தை தொட்டது. நான் கைக்கடிகாரத்தை பார்த்தேன்.

இதற்குத்தான் காத்திருந்ததுபோல பக்கத்து இருக்கைப் பயணி, குவளை விளிம்பிலே சிந்திய காப்பியை நக்கிவிட்டு, குடிக்க ஆரம்பித்தார். நேர்முகத்துக்கான நேரம் கடந்து பல நிமிடங்கள் ஆகிவிட்டன. நான் பின் கதவு வழியாக இறங்கி எதிர் திசையில் நடக்கத் தொடங்கினேன். வேலை கிடைக்காவிட்டால் என்ன? நாற்காலிப் பயணி, இரண்டு டொலரை கண்டுபிடித்தது கொண்டாடப்பட வேண்டிய தருணம் அல்லவா? திரும்பிப் போவதற்கு வைத்திருந்த இரண்டு டொலரை கையில் எடுத்தேன். என்ன சாப்பிடலாம் என்ற நினைப்பில் மனம் லயித்தது.

வேதநாயகம் தபேந்திரன் - இலங்கை



# புலம்பெயர் காய்ச்சல்

அவர் ஒரு ஆசிரியர். மூன்று பிள்ளை - கள். மனைவி உத்தியோகமில்லை. ஆனால் அவர் தனது ஓய்வு நேரத்தில் வேறு வழியில் உழைத்து நிறைந்த வசதியுடன் வாழ்கின்றார்.

அண்மையில் என்னைத் தொடர்பு கொண்டார். தான் குடும்பமாகக் கனடா போக முயற்சிப்பதாகவும் இது தொடர் - பாக உங்களது கருத்து என்ன எனக் கேட்டார்.

ஏன் திடீரெனக் கனடா போக ஆயத்தம் செய்கிறீர்கள் எனக் கேட்டேன். நாட்டின் பொருளாதார எதிர்காலத்தை நினைக்கப் பயமாக உள்ளது. அதனால் தான் போகப் போகிறோம் என்றார்.

போர் நடைபெற்ற காலத்தை எல்லாம் தாண்டி வந்தோம் தானே. இப்போது என்ன புதிதாக நெருக்கடி எனக் கேட்டேன்.

உங்களது மூத்தபிள்ளை பதினோராம் ஆண்டு படிக்கின்றார். இம்முறை ஓ.எல், அடுத்த பிள்ளை ஒன்பதாம் ஆண்டு. அதற்கு அடுத்த பிள்ளை ஏழாம் ஆண்டு. அவர்களை இப்படியே பிடுங்கிக் கொண்டு போய் கல்வி உயிருடன் இன்னொரு நாட்டில் திடீரென உங்களால் நட முடியாது.

அங்குள்ள கல்வி முறைமை, மொழி வழமை ஆகியவற்றையெல்லாம் பிள்ளைகள் பற்றிப் பிடிக்க மாட்டார்கள்.

முன்பு இவ்வாறு சென்று பிள்ளைகளது கல்வி உயர்வை இழந்த ஒரு குடும்பத்தின் நிலையை உதாரணம் காட்டினேன்.

நண்பர் எனது ஆலோசனையைக் கேட்டுத் தனது முடிவை மாற்றிக் கொண்டார்.

அண்மைய சில மாதங்களாகக் கனடா செல்லும் காய்ச்சல் இலங்கையில் தமிழரை ஆட்டிப் படைக்கின்றது.

1983 யூலை மாதத்திற்குப் பின்னால் இடம்பெற்ற பெரியதொரு அலைப்புலப்பெயர்வு போலத் தற்போது ஒரு அலை அடிக்கின்றது.

போர்க்காலத்தில் புலம்பெயர்ந்து சென்ற ஏராளம் பேர்கள் தாயகம் வரும் போது நிகழ்வுகளுக்குச் செலவிடும் பெருந்தொகைப் பணம், அவர்கள் காணி கட்டிடங்களை அதிக விலை கொடுத்து வாங்குதல், வாகனங்களை வாடகைக்கு அமர்த்திப் பயணம் செல்லும் பாங்கு ஆகியவற்றைப் பார்த்து இங்குள்ள நடுத்தரக் குடும்பங்கள் தாமும் அதுபோல வாழ ஆசைப்படுகின்றனர்.

காட்சி விளைவு மனித மனங்களை அலைபாயச் செய்கின்றது. இது அவர்களது தவறு அல்ல.

கனடா அரசாங்கம் அங்கு வருபவர்கள் ஆறு மாதம் தங்கி நிற்கக்கூடிய சுற்றுலா விசாக்களை வழங்கி வருகின்றது.

சுற்றுலா விசாவில் செல்லும் ஒருவர் அங்கு வேலை வாய்ப்பைப் பெறக்கூடிய உரிமை இருக்காது. அதனை விட ஆறு மாதம் முடிய நாட்டை விட்டு வெளியேற வேண்டும். பத்து வருட காலத்திற்கு இவ்வாறு ஆறு மாத காலத்திற்கொரு - முறை வந்து செல்லக் கூடியதாக விசா வழங்குகின்றனர். ஆறாவது மாதம் முடிய கனடாவை விட்டு வெளியேறிப் பின்னர் ஒரு மாதம் கழித்து வரக் கூடியதாக விசா வழங்குகின்றனர்.

இது Visit Visa - விசிட் விசா அதாவது வருகைதரு விசா என அழைக்கப்படுகின்றது. இந்த விசாவைப் பெறுவதற்கு ஒருவர் இரத்த உறவினர், அல்லது சாதாரண உறவினர், நண்பரது ஸ்பொன்சரைப் பெற வேண்டும். ஸ்பொன்சர் கடிதத்துடன் இலங்கையிலுள்ள கனடாத் தூதரகம் கோரும் கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு நிறைவேற்றியதும் விசாவை வழங்குவார்கள்.

இந்த விசிட் விசா என்பது ஒரு வகையில் கூறினால் சுற்றுலா விசா - Tourist Visa எனலாம். இந்த விசாவைப் பெற்றுக் கனடாவினுள் நுழைபவர் சட்ட ரீதியாக வேலை செய்ய முடியாது. அவருக்கு ஏற்படும் மருத்துவச் செலவுகளை ஸ்பொன்சர் வழங்கியவர் தனது சொந்தப் பணத்தில் செலவழிக்க வேண்டும். ஸ்பொன்சர் செய்தவரது மருத்துவக் காப்புறுதி மூலமாகச் செலவை ஈடுசெய்ய முடியாது.

இதுதான் இந்த விசிட் விசாவில் செல்வோர் தொடர்பான நடைமுறை.

ஆனால் இங்கிருந்து கனடா பயணப்படுவோர் சொல்பவை வேறு. “கனடாவிற்கு விசிட் விசாவில் போய் Work permit - வேலை அனுமதி பர்மிட் எடுக்கலா - மாம். பின்னர் Permanent Visa- நிரந்தர விசாவுக்கு விண்ணப்பிக்கலாமாம். வதிவிட உரிமை Permanent Resident - பிஆர் எடுக்கலாமாம். தமக்குள் தாமே பல “மாம்” அதாவது எடுக்கலாமாம் என்பதுபோல கற்பனை செய்துகொண்டு விமானமேறிப் பறக்கின்றனர். உள்நாட்டில் வாழ்ந்த வளமான வாழ்வையும் விட்டு விட்டுப் பறப்போர் பலர்.

தற்போது அரசாங்க அலுவலகங்களுக்குச் சென்றால் சில கதிரைகளில் ஆள்களைக் காண முடியவில்லை. கேட்டால் கனடா போய் விட்டதாகக் கூறுகின்றனர். ஏதோ கொழும்புக்குப் போவது போலக் கனடாப் பயணமும் வந்து விட்டது.

இப்போது அந்த விசா தொடர்பான தெளிவான பதில்கள் பல கிடைக்கத் தொடங்கி விட்டது.

உள்ள பணம் எல்வாற்றையும் செலவழித்து ஏன் போனோம். கனடாவில் உள்ளவர் உள்ள கையிருப்புக் காசு எல்லாவற்றையும் செலவழித்துப் பெருந் - தொகை கடன்பட்டு வரவழைத்தோமே பயனில்லாமல் போனதே. பெருங்கடன் என்னைத் துரத்தப் போகிறது. என்னவென்று மீள்வேன்.

அதை விடப் பெரும் பிரச்சனை உறவுகளின் வீட்டில் சென்று தங்கும்போது வருகிறது. வரவழைத்த உறவினரும் இங்கிருந்து சென்றவரும் முதலாம் தலைமுறையாக இருக்கும் போது அவர்களுக்குள் ஒத்துவரும்.

ஆனால் இங்கிருந்து சென்றவரது பிள்ளைகளும் கனடாவிலுள்ளவரின் பிள்ளைகளுக்கும் பிறந்து வளர்ந்த சூழல் அந்நியப்பட்டதாகவே இருக்கும். ஆளையாள் பழகுவதிலுள்ள புரிதலில் இடைவெளி அதிகம் இருக்கும்.

உறவினர் ஒருவரது வீட்டினுள் ஒரு சில நாள்கள் தங்கியிருக்கும் போது உறவு இனிப்பாக இருக்கும். பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பதுபோல உறவு கசந்து விடுகிறது.

(30ம் பக்கம் வருக)



எஸ். ராஜ்மோகன்

## பணிலமாடம் - 74

# பனிக்காலத் தேவை

கோடை காலத்தை முழுமையாக அனுபவித்த திருப்தியில் தொடரவிருக்கும் பனிக்காலத்தை சிரமத்துடன் எதிர்நோக்குகின்றோம். வீதி எங்கும் பனி பொழிந்து கிடக்கும். பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டுநர்களது முகங்களில் ஏதோ ஒரு கலக்கம் தென்பட ஆரம்பிக்கும். வாகனப் பராமரிப்பாளர்களுக்கு மூச்சுவிடக் கூட நேரம் கிடைக்காது போகும். இரவுப் பொழுதுகள் அதிகரி-த்து பகல் பொழுதுகள் குறுகிவிடும். உறங்கு நிலைக்கு செல்ல முடியாத நாங்களும் கொஞ்சம் கொஞ்சமாக இயற்கையோடு வாழப் பழகிவிடுவோம்!

பனிக்காலத்தின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் அதிகளவு கவனத்தை ஈர்ப்பது வாகனங்களின் பராமரிப்பு ஆகும். பனிக்காலத்திற்குப் பயன்படும் ரயர்களின் தேவை, வாகனத்தை இயக்க முன்னர் சரி பார்க்கும் அடிப்படையான விடயங்கள், வாகனங்களில் இருக்க வேண்டிய முக்கியமான பொருட்கள், வாகனப் பராமரிப்பின் தேவைகள் போன்ற பல விடயங்களில் கவனமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை இயற்கை எமக்கு வருடாவருடம் சொல்லித்தருகின்றது.

வாகனங்களின் ரயர்கள் பாதுகாப்பான பிரயாணத்-திற்கு அவசியமானவை. எல்லாப் பருவ காலங்க-ளுக்கும் பயன்படும் ரயர்களை (all season tire) விட பனிக்கால ரயர்கள் (winter tire) நாற்பது சதவீதம் விரைவாக பனிகளின் மேல் வாகனங்களை நிறுத்த உதவுகின்றன. அத்துடன் பனிக்கால ரயர்கள் பனியில் வாகனங்கள் கட்டுப்பாட்டை இழக்க ஆரம்பிக்கும் போது, வாகன ஓட்டுநர்களுக்கு கூடுதலான கட்டுப்பாட்டைக் கொடுக்கின்றன. 3PMSF என்று அழைக்கப்படும் 3 Peak Mountain Snow Flake அடையாளம் அதிகார பூர்வமாகப் பொறிக்கப்பட்ட பனிக்கால ரயர்கள், பனி நிலமைக்கு ஏற்ற வகையில் சிறந்த பாதுகாப்பை வழங்குகின்றன. ரயர்களின் இரு பக்கங்களிலும் அடையாளப்படுத்தப்பட்டிருக்கும் இந்தச் சின்னம் பொறிக்கப்பட்ட ரயர்கள் பனிகால சோதனைத் தரந-ிலையில் உறுதிப்படுத்தப்பட்டவை -யாக உள்ளன. பனிக்கால ரயர்களை வாங்கும் போது இந்த சின்னங்களை அவதானித்து வாங்க வேண்டும்.

பனிக்காலங்களில் பனிக்கால ரயர்களைப் பாவிப்ப-தாக உறுதி செய்தால், சில வாகனக் காப்புறுதி நிறுவனங்கள் கட்டுப்பணத்தில் கழிவுகளை வழங்குகின்றன. இந்த சந்தப்பங்களில் கட்டாயம் பனிக்கால ரயர்களை பயன்படுத்தியே ஆக வேண்டும். இல்லாவிடில், எமக்குரிய காப்புறுதி கொடுப்பனவுகள் இல்லாமல் போகும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

PSI என்று அழைக்கப்படும் ரயர்களின் அமுக்கத்தின் அளவு ஒவ்வொரு ஐந்து பாகை செல்ஸியஸ் வெப்பநிலை குறையும் போது ஒரு PSI குறையும். இதன் காரணத்தினால் ரயர்களின் அமுக்க அளவை கவனத்தில் கொள்ள வேண்டும். ரயர்களின் அமுக்கத்தின் அளவு குறை-வாகவோ அல்லது கூடுதலாகவோ இருந்தால் வாகனங்களை பனியின் மேல் நிறுத்த முனையும் போது எதிர்மறையான செயல்திறன்களை கொடுக்கும்.

வாகன உற்பத்தியாளர்களின் விபரக் குறிப்பீடுகளுக்கு (vehicle specifi-cations) ஏற்ற வகையில் சரியான ரயர்களை வாங்குவது முக்கியமானது. மின்சார வாகனங்களின் முறுக்கு விசையின் (torque) அளவு அதிகமாக இருப்பதால் மின்சார வாகனங்களுக்கு ரயர்கள் வாங்கும் போது வாகன உற்பத்தியாளர்கள் சிபார்சு செய்யும் ரயர்களை வாங்குவது கட்டாய -மானது. பனிக்காலம் ஆரம்பித்தவுடன் எவ்வளவு விரைவாக பனிக்கால ரயர்களை மாற்றுகின்றோமோ அதே மாதிரி பனிக்காலம் முடிந்தவுடன் கோடை கால ரயர்களை உடனடியாக மாற்றி விடவேண்டும். பனிக்கால ரயர்கள் பொருத்திய வாகனங்கள் வெப்பமான வீதிகளில் பயணிக்கும் போது அந்த ரயர்களின் தேய்மானம் அதிகளவாக இருக்கும்.

பனிக்காலங்களில் பொதுவான வாகன பராமரிப்பு என்று பார்க்கும் போது பல விடயங்கள் அதில் அடங்குகின்றன. தினமும் வாகனத்தை இயக்க ஆரம்பிக்க முன்னர் வாகனத்தின் அடிப்படைத் தேவைகளான பெற்றோல், ரயர்கள், பிரேக், ஏதாவது கசிவுகள், கண்ணாடித் துடைப்பான்கள், வாகன விளக்குகள், குளிரில் உறையாத கண்ணாடி கழுவும் திரவம் மற்றும் அசாதாரண சத்தங்கள் என்று பலவற்றைக் கவனத்தில் எடுக்கவேண்டும்.

குளிர்நிலை -20 பாகை செல்ஸியஸ்க்கு செல்லும் போது வாகனங்களின் பற்றரிகள் அதனது வலுவை இழக்க ஆரம்பிக்கின்றன. எனவே, வாகன பற்றரிகளின் தரத்தை வாகனப் பராமரிப்பாளர்களிடம் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். முக்கியமாக, மின்சார வாகனங்களுக்கு வாகன பற்றரிகளின் தரம் மிகவும் முக்கியமானது. மின்சார வாகனங்களின் பற்றரிகள் தரும் பயணம் செய்யும் துாரம் பற்றிய தரவுகள் அதன் உற்பத்தியாளர்கள் குறிப்பிடுவது போல் சரியாக இருப்பதில்லை என்று நோர்வேஜியன் வாகனங்களுக்கான அமைப்பு ஒன்றின் புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

கிட்டத்தட்ட பதினெட்டு சதவீதத்துக்கும் குறைவான அளவிலே மின்சார வாகனங்கள் பயணம் செய்யும் துாரங்களை பாவனையாளர்களுக்கு வழங்குவதாக அதன் கணிப்பீடு காட்டுகின்றது. எனவே, மின்சார வாகனங்களை வைத்திருப்பவர்கள் எப்பொழும் சாராசரியாக பதினெட்டு சதவீதத்திற்கும் குறைவான பயணம் செய்யும் துாரத்தைக் கணிப்பிட்டே பயணங்களை ஆரம்பிக்க வேண்டும்.

பனிக்காலங்களில் வாகனங்களில் சேமித்து வைத்திருக்கும் பொருட்கள், பல சந்தர்ப்பங்களில் பெரிதும் பயன்படுகின்றன.

Snow brush, ice scraper, windshield fluid, booster cable, tire infla-tion kit, first aid kit, lighter, pencil, notebook, flashlight, drinking water, food bars, warning lights, power bank, sleeping bags, boots, hats, mittens, trap, cardboards போன்ற பல பொருட்கள் பனிக்காலங்களில் வாகனங்களில் இருக்க வேண்டும் என்று CAA roadside assistance நிறுவனத்தின் சஞ்சிகை பரிந்துரை செய்கின்றது. பனிக்காலங்களில் எங்களின் பாதுகாப்பும், மற்றவர்களின் பாதுகாப்பும் எமது கைகளிலேயே உள்ளது.



கனகேஸ்வரி நடராஜா

# கிணற்றடி

கனடாவில் வாழும் ஒருவர் அண்மையில் பல வலைத்தளங்களில் தாயகத்தில் தனது வளவுக்குள் கட்டியிருந்த கிணற்றடியின் படத்தைப் பகிர்ந்திருந்தார். ஒரு கிணறு, கப்பி போடப்பட்ட கயிறு, உடுப்புகள் தோய்ப்பதற்கான கல், பக்கத்தில் ஒரு வக்கு, அதனையண்டி சில மரங்கள். இவைதான் அந்தப் படத்தில் காணப்பட்டன.

அதனைப் பார்த்த பலரும் உற்சாகமாக பலவித குறிப்புகளை பகிர்ந்திருந்தனர். கம்பியின் கயிற்றில் ஒரு அலுமினிய வாளியை தொங்க விடும்படி ஒருவர் கேட்டிருந்தார். இரு கம்பங்களை நாட்டி அவற்றில் ஒரு கயிற்றைக் கட்டி உடுப்புகளைத் தோய்த்து காயவிட வகை செய்யுமாறு வேறொருவர் எழுதியிருந்தார். இக்குறிப்புகளை வாசிக்கும்போது எமது மக்களின் வாழ்க்கையில் கிணற்றடி எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பது புலனாகிறது. புலம்பெயர்ந்த பின்னரும் கிணற்றடியை எவ்வளவு தூரம் நேசிக்கிறார்கள் என்பதையும் தெரிந்துகொள்ள முடிந்தது. மொத்தத்தில் கிணற்றடிக்குப் போக முடியவில்லையே என்ற ஏக்கத்தை இந்தப் படம் எடுத்துக் காட்டியது.

இலங்கையின் புவியியல் அமைப்பில் இறைவன் கொடுத்த ஒரு வரம் இந்தக் கிணறுகள். எமது தாயகத்தின் வடபகுதியில் நிலத்துக்குக் கீழ் நீர் காணப்படுவது பெரும் வரப்பிரசாதம். கிணறு என்ற ஒன்று இல்லாவிடில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மக்களோ மற்றும் ஜீவராசிகளோ வாழ்ந்திருக்க முடியாது. பருவகால மழைவீழ்ச்சியை நம்பி வாழும் தாவரங்கள் மாத்திரம் உள்ள - மனித நடமாட்டம் இல்லாத ஒரு பிரதேசமாகவே குடாநாடு காட்சியளித்திருக்கும்.

யாழ்ப்பாண குடாநாடு மயோசீன் காலத்தைச் சார்ந்த சுண்ணக் கற்பாறைகளினால் (Miocene Lime Stones) ஆக்கப்பட்டது. இந்தச் சுண்ணக் கற்பாறை தண்ணீரை கீழே விடும் தன்மையைக் கொண்டது. இதனால் குடாநாடு முழுவதும் நிலத்திற்குக் கீழ் நீர் காணப்படுகிறது. ஆனால் இந்த நீரின் மட்டம் இடத்துக்கு இடம் வேறுபடும். சில இடங்களில் சில அடிகள் தோண்டிய உடனேயே நீர்மட்டத்தை அடைந்து விடலாம். வேறு சில இடங்களில் ஆழமாகத் தோண்டிய பின்னரே நீர்மட்டம் தெரியும். அதுமட்டுமன்றி சில கிணறுகளில் நீர் குடிப்பதற்கு உகந்த நன்னீராக இருக்கும். ஆனால் அதற்கு அண்மையிலுள்ள சில கிணறுகளில் உவர்நீர் காணப்படும்.

கிணறு தோண்டுவதற்கு முன்னர் நன்னீர் உள்ள இடத்தை கண்டுபிடிப்பதற்கென விசேட திறனுள்ள நிபுணர்களை வரவழைப்பார்கள். அவர் தென்னை ஈர்க்கினால் நிலத்தை அளப்பார். பிறகு கணக்குப் பார்ப்பார். அதன் பின்னர் அவர் அடையாளம் காட்டும் இடத்தில் நம்பிக்கையுடன் கிணறு தோண்டப்படும். தண்ணீர் தட்டுப்பட்டவுடன் கிணறு தோண்டுபவர்களுக்கு ஏற்படும் ஆனந்தத்துக்கு அளவு கிடையாது. சாம்பிராணிப் புகை காட்டி பூசை செய்வார்கள். ஆனால் அவ்விடத்துத் தண்ணீர் நன்னீராக இருக்குமென்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. நன்னீராக அமைந்துவிட்டால் அதுவும் அதிர்ஸ்டம்தான்.

இவ்வாறு மிகவும் பிரயத்தனப்பட்டு உருவான கிணறுகள் எல்லாமே வருடம் முழுவதும் நீர்மட்டம் குறையாமல் இருக்குமென்பதற்கு உறுதி இல்லை. சில கிணறுகள் கோடை காலத்தில் வற்றி விடும். அங்கு வாழ்பவர்கள் அக்காலத்தில் நீண்ட தூரம் நடந்து தண்ணீருக்கு அலைய நேரிடும். பருவமழை பெய்தவுடன் நீர்மட்டம் பழைய நிலைக்கு வந்துவிடும். ஒருசில கிணறுகள் மட்டும் என்றுமே வற்றாமல் இருக்கும். இதில் இன்னொரு விசேடம் என்னவெனில் இந்த நீர் மட்டம் நிலத்தின் கீழ் எங்கும் தொடர்புடையது. இதனால்தான் நிலாவரை போன்ற ஆழம் கண்டுபிடிக்க முடியாத கிணறுகளுக்குள் தேசிக்காயை போட்டால் அது கீரிமலையில் சென்று மிதக்கும் என்ற கட்டுக்கதை உருவானது. குடாநாட்டின் ஒரு சில ஊர்கள் ஆழமான கிணறுகளுக்குப் பெயர் போனவை. இங்கு தண்ணீர் அள்ளிக் குளிப்பது சுலபமானதல்ல. இதனால் இத்தகைய இடங்களுக்கு முன்னைய காலத்தில் தங்கள் பெண்பிள்ளைகளை திருமணம் செய்து அனுப்பி வைக்க பெற்றோர் தயங்குவர்.

எனது கணவரின் ஊர் சரவணை. அங்கு பொதுவாக நல்ல தண்ணீர்க் கிணறுகள் அரிது. எனது கணவரின் வீட்டுச் சுற்றுவட்டாரத்திலேயே அவர்கள் கிணறு ஒன்றுதான் நல்ல தண்ணீர் உள்ளது. அது தீர்த்தம் போன்றிருக்கும். அதனால் காலை முதல் மாலை வரை எந்நேரமும் சுற்றுவட்டாரத்தில் இருப்பவர்கள் குடிதண்ணீரை எடுப்பதற்கு குடத்துடன் வருவார்கள். குடிப்பதற்கு மட்டும் தண்ணீர் அள்ள அனுமதியுண்டு. குடங்களை அவர்கள் தங்கள் வீடுகளில்தான் புளியும் சாம்பலும் போட்டு பளபளவென மினுக்கி எடுத்து வருவார்கள். விளக்கு வைத்தபின்னர் தண்ணீர் அள்ளுவதற்கு தடை. விளக்கு வைக்கும் நேரம் வந்தவுடன் எனது மாமியார் படலைக்கு பெரிய ஆமைப் பூட்டு போட்டு மூடிவிடுவார். எவ்வளவுதான் எவர் வந்து கெஞ்சினாலும் அது திறவாக் கதவுதான். விளக்கு வைத்த பின்னர் தண்ணீர் வீட்டுக்கு வெளியே போனால் எங்கள் கிணற்று நீர் உவர்ப்பாக மாறிவிடுமென மாமியார் விளக்கம் கொடுப்பார்.

தண்ணீர் அள்ள வரும் பெண்கள் அதற்காக மட்டும் வருவதில்லை. வெறும் குடங்களை வைத்துவிட்டு மாமியாரின் வீட்டு விறாந்தையில் அரை மணித்தியாலமாவது அமர்ந்திருந்து ஊர் மற்றும் உலகப் புதினங்களை கதைப்பார்கள். எனது மாமியாரிடம் பற்றரியில் இயங்கும் வானொலிப் பெட்டி இருந்தது. அதனையும் கேட்பார்கள். சில வேளைகளில் எல்லோருக்கும் வெறும் தேத்தண்ணீரும் கிடைக்கும்.

இன்று அங்கு குக்கிராமங்களுக்குக் கூட மின்சார வசதி கிடைத்துவிட்டது. இதனால் வீடுகளுக்குள் குளியலறைகள் வந்துவிட்டன. குழாய்கள் மூலம் தண்ணீர் சென்றடைகிறது. துலா கம்பியாகி, பின்னர் குழாய்களாக மாறினால் என்ன - துலா மிதித்து தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சுவது மிசினினால் இறைப்பதாக மாறினால் என்ன - இவற்றுக்கெல்லாம் மூலாதாரமான கிணறு இல்லாவிட்டால் ஒன்றுமே செய்ய முடியாது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வாழ்வாதாரமே கிணறுகள்தான்.



இரா. சம்பந்தன்

# இரும்புப் பாரையும் கருங்கல் பாறையும்

அறம் சார்ந்த கருத்துகள் அதிகம் பேசப்பட்ட சங்கம் மருவிய காலத்தில் ஒருநாள். தமிழுக்காகத் தன்வாழ்வை அர்ப்பணித்த கவிமூதாட்டி ஔவை ஒரு ஊரில் இருந்து வேறொரு ஊருக்கு நடந்து கொண்டிருந்தாள். இன்று போல தார் வீதிகள் இல்லை. தெரு விளக்குகள் இல்லை. பாதைகள் காடுகளின் ஊடாகவும் கடற்கரைகளின் ஓரமாகவும் மலைத் தொடர்களின் இடையேயும் தான் அன்று அமைந்திருந்தன.

தான் சென்ற வழியில் முதலில் ஒரு காட்டினைக் கண்டாள் ஔவை. பிற வழிப்போர்கர்களுடன் சேர்ந்து பேசிக்கொண்டே சென்ற அவள் ஒரு காட்சியைக் கண்டு துணுக்குற்று நின்றாள். வேடன் ஒருவன் தன் கையிலிருந்த வில்லை வளைத்து அம்பு ஒன்றினைச் செலுத்தி காட்டு யானை ஒன்றின் நெற்றியைத் துளைத்து விட்டான். துடிதுடித்து வீழ்ந்த யானை சில கணத்தில் இறந்தும் போய்விட்டது.

மனம் கொதித்தாலும் அது வேட்டுவ அறம். அவர்கள் அப்படித்தான் நடந்து கொள்வார்கள் என்று தனக்குத் தானே சமாதானம் கூறிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தாள் ஔவை. காட்டின் எல்லையைக் கடக்கும் போது படை வீரர்கள் சிலர் பஞ்சு நிறைந்த சாக்கு மூட்டைகள் பலவற்றைச் சுற்றிவர அரணாக அடுக்கி வைத்துக் கொண்டு உள்ளே இருந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

வியப்போடு அவர்கள் அருகில் சென்ற ஔவை பஞ்சைப் பாதுகாப்பு அரணாக வைத்திருக்கிறீர்களே இது போதிய பாதுகாப்பை உங்களுக்குத் தருமா என்று கேட்டாள். வேகமாக வரும் அம்புகளின் தாக்குதல்களைத் தடுப்பதற்கு பஞ்சு மூட்டைகளை விடச் சிறந்த தடுப்புச் சுவர் கிடையாது ஆச்சி. எந்தக் கூரிய அம்பாலும் பஞ்சு மூட்டைகளைத் துளைக்க முடியாது என்றார்கள் அவர்கள்.

படை வீரர்களின் அனுபவம் மிக்க வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டே நடந்தாள் ஔவை. அவளும் அவளுடன் வந்தவர்களும் இப்போது ஒரு மலையடிவாரத்துக்கு வந்துவிட்டார்கள். ஆனால் மேற்கொண்டு பிரயாணத்தைத் தொடர விடாமல் அங்கு வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் அவர்களைத் தடுத்தனர். காரணம் கேட்டாள் ஔவை.

அதோ அந்த மலைப் பாறையைப் பிளந்து உடைப்பதற்காக காலையில் இருந்தே நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம். பலம் பொருந்தியவைகளும் நெடிய தோற்றம் கொண்டவை - யுமான இரும்புப் பாரைகளைப் பயன்படுத்திப் பார்த்துவிட்டோம். எதற்கும் அசைந்து கொடுக்காத வலிய பாறையாக இருக்கின்றது அது. அதனால் வெடி மருந்து வைத்துத் தகர்க்கின்றோம் வெடி வெடித்துப் பாறை உடையட்டும் அப்புறம் நீங்கள் போகலாம் என்றார்கள்.

ஔவையும் மற்றவர்களும் தூரச் சென்று ஒரு மலையருவிக் கரையிலே ஓய்வெடுத்தார்கள். இயற்கையின் வனப்பிலே மனத்தைப் பறிகொடுத்த ஔவை அங்கே இன்னுமொரு விசித்திரமான காட்சியைக் கண்டாள். ஏதோ ஒரு பறவை பழமாக உண்டுவிட்டு எச்சமாகப் பாறையொன்றிலே போட்ட ஒரு வித்து சிறு கன்றாக முளைத்து எழ அதன் பசுமையான பிஞ்சு வேர்கள் அந்தப் பாறையைப் பிளந்து கொண்டு உள்ளே சென்றிருந்தன.

ஔவை அன்று தான் கண்ட நான்கு நிகழ்ச்சிகளையும் மனத்திரையில் ஓடவிட்டுப் பார்த்தாள். வலிமையும் பலமும் கொண்ட யானையின் நெற்றியைத் துளைத்து வெற்றி கொள்ளும் அம்பு மென்மையான பஞ்சு மூட்டையைத் துளைக்க முடியாமல் தோல்வியடைந்து விடுகின்றது.

வலிய இரும்புப் பாரைகளைப் பயன்படுத்தியும் பிளக்க முடியாத கற்பாறைகளை பசுமையான மரங்களின் மென்மையான வேர்கள் புகுந்து பிளந்து எறிந்து விடுகின்றன எனவே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வலிமை - யானவற்றைக் கொண்டு வலிமையானவைகளை வென்றுவிட முடியாது. மென்மையானவற்றாலும் சில நேரங்களில் வலிமையாவற்றை வென்றுவிட முடியும்.நாம் பேசும் வார்த்தைகளும் அப்படித்தான்.

ஆணவமும் கோபமும் அதிகார தோரணயும் மிக்க வலிய வார்த்தையை நாம் பேசினால் அது எந்த இறுகிய இதயத்திலும் சென்று மாற்றத்தை ஏற்படுத்த மாட்டாமல் பயனின்றித் தோற்றுப் போகும். ஆனால் மென்மையும் இனிமையும் பணிவும் அன்பும் மிக்க வார்த்தைகளை மட்டுமே நாம் பேசக் கற்றுக் கொள்வோமாக இருந்தால் அந்த வார்த்தைகள் எந்தக் கொடிய இதயங்களிலும் புகுந்து அவற்றைக் கரைத்து வென்றுவிடும்.

எனவே மனிதர்களே மனிதர்களே கடுமையான சொற்களைத் தவிர்த்து மென்மையான சொற்களைப் பேசக் கற்றுக் கொள்ளுங்கள்.

இதை நான் ஒரு பாடலாக எழுதி தமிழ்ச் சமுதாயத்துக்கு கொடுக்க வேண்டும். நல்வழியிலே தமிழன் வாழ்வு செல்லட்டும். தனது துணிப்பையில் இருந்து ஏட்டையும் எழுத்தாணியையும் எடுத்து எழுதத் தொடங்கினாள் ஔவை.

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்தில்
பட்டுருவுங் கோல்பஞ்சில் பாயாது - நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

(ஔவையின் நல்வழிப்பாடல் 33)

வேழத்தில்பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது - வலிய யானையின் மேலே பட்டு உள்ளே உருவிச் செல்லும் அம்பானது மெல்லிய பஞ்சின் மேலே பாயாது நின்றுவிடும். நேட்டு இருப்புப் பாரைக்கு நெக்கு விடாப்பாறை - நெடுமையாகிய இரும்புப் பாரைக்குப் பிளவாத கருங்கற் பாறையானது பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும் பச்சை மரத்தின் வேருக்குப் பிளந்துபோம் அது போல வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் - வெட்டென்று பேசுகின்ற வலிய சொற்கள் மென்மையாகப் பேசுகின்ற இன்சொற்களை வெல்ல மாட்டாவாகும்.



பொன்னையா விவேகானந்தன்

# மரபும் மாண்பும் 41

## இயற்கை போற்றும் மாண்பு

அண்டப் பெருவெளியில் கண்டறியப்பட்ட உலாவும் கோள்களுள் பூமி, உயிரினங்கள் தோன்றி வாழும் பெருஞ்சிறப்புக் கொண்டது. பூமியின் உயிரின உருவாக்கம் பெருவியப்புக் கொண்டதாகவும் விடை காணமுடியாத வினாக்களையும் கொண்டது. ஓரறிவு உயிர் முதல், ஆறறிவு உயிர்கள் வரை கோடானுகோடி உயிரிகள் இந்தப் பூமியில் தோன்றி வாழ்கின்றன.

தோன்றிய உயிர்கள் ஒவ்வொன்றும் வாழ்வின் நீட்சிக்காக ஒன்றில் ஒன்று தங்கியயிருப்பது இயற்கையின் தவிர்க்க முடியாத நியதி. உயிர்களுக்கிடையேயான சங்கிலித் தொடர்ச்சியில் மானுடமே உச்ச உயிர்த்தோற்றம்.

நீண்ட வாழ்வியலில் வழியேயான கூர்ப்பின் முதிர்ச்சியே மானுடத் தோற்றம் என அறிவியல் அழுத்தமாக உரைப்பினும் பூமியின் உயிராக்க சமநிலையைப் பேணுவதற்கு ஆறாம் அறிவுடன் கூடிய மானுடத்தின் தோற்றம் மிக முதன்மையானது என்ற இயற்கையின் விதியே மானுடத் தோற்றத்துக்கு வித்திட்டது எனக் கருதலாம்.

மானுட குலம் கொண்டிருக்கும் ஆறாம் அறிவு, பகுத்து அறியும் சிந்தனைத்தளத்தோடு தொடர்புபட்டது. தனக்கானது மட்டுமன்றித் தான் வாழும் சூழலின் மேன்மைக்காவும் சிந்தித்து இயங்கும் ஆற்றல் மிக்கது. மானுடத்தின் தோற்றகாலத்திலிருந்தே பூமியைக் கட்டமைத்து இயக்கி வந்ததில் மானுடத்துக்குப் பெரும்பங்கு உண்டு.

இக்காலத்தே பூமியின் சமநிலை இயக்கத்துக்கும் இயற்கைக்கும் அச்சுறுத்தல் மானுடமே என்பது போன்ற குற்றச்சாட்டுகள் பல முன்வைக்கப்பட்டாலும் இயற்கையையும் பிற உயிர்களையும் பேணிப் போற்றியதில் மானுடத்துக்கு உண்டான பங்களிப்பை மறுத்துவிடமுடியாது. இயற்கை தன் படைப்புகளுள் மானுடத்துக்கு மட்டுமே ஆறாம் அறிவை வழங்கியிருக்கின்றது. இந்த ஆறாம் அறிவு, உலகையும் பிறவுயிர்களையும் பேணுவதற்காக மானுடத்துக்குக் கொடுக்கப்பட்ட செங்கோல்.

தொன்மையான மானுடக் குடிகளான தமிழர் தொடக்ககாலம் தொட்டே இயற்கையையும் பிறவுயிர்களையும் பேணி வந்துள்ளனர். இதற்கான சான்றுகள் பலவற்றையும் இலக்கியங்களில் காணலாம்.

மரம், செடி, கொடி, மலை, ஆறு, அருவி என்பவற்றோடு பல்லுயிரிகள் உள்ளடங்கிய இயற்கை தமிழர்களின் வாழ்வுக்குப் பேராதாரமாகவும் வழிபாட்டுக்குரியதாகவும் திகழ்ந்தது. தொடக்ககாலத்தில் உணவுக்காகக் குறித்த உயிரிகளை வேட்டையாடுதல் வழக்கமேயாயினும் பின்னாட்களில் கொல்லாமை என்ற பேரறம் தமிழர்களிடையே உருவாயிற்று.

பாரி என்ற மன்னன் முல்லை என்ற பூங்கொடிக்குத் தேர் கொடுத்தமை, சிபி என்ற மன்னன் புறாவுக்காகத் தன் தசையை அறுத்துக் ஈந்தமை, மனுநீதிச் சோழன் பசுவுக்கு நீதி வழங்கியமை, பேகன் என்ற மன்னன் குளிரால் வாடிய மயிலுக்குப் போர்வை போர்த்தியமை போன்ற செய்திகளை இலக்கியங்கள் கூறுகின்றன. தன் தாய் நட்டு வளர்த்த புன்னை மரத்தைத் தன்னுடைய உடன் பிறந்த சகோதரியாகவே கருதுகின்றாள் ஒரு நெய்தல் நிலத்துப் பெண். இச்செய்திகள் பொய்யா, மெய்யா என ஆராய்வதை விடுத்து, அவை வெளிப்படுத்த முயலும் கருத்துகளை உள்வாங்குவோமெனில் தமிழர்கள் இயற்கை மீது கொண்டிருந்த பேரன்பை உணரமுடியும்.

தமிழர்கள் அறஞ்சான்ற வாழ்வையும் பல பண்பாட்டு மரபுகளையும் இயற்கையிடமிருந்தே கற்றனர் என்று கூறின், அது பொய்யாகாது.

> “மண் திரிந்த நிலனும்
> நிலனேந்திய விசும்பும்
> விசும்பு தைவரு வளியும்
> வளித்தலை இய தீயும்
> தீ முரணிய நீரும் என்றாங்கு
> ஐம்பெரும் பூதத்து இயற்கை” (புறம் 2)

புறநானூறு என்ற இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியத்தில் இப்பாடல் இடம்பெறுகின்றது. இயற்கையானது, நிலம், விசும்பு என்னும் வான், காற்று, தீ, நீர் என்ற ஐந்து பூதங்களானாலானது என்பதை அன்றே பகுத்துக் கண்டறிந்தோர் தமிழர்.

சேர மன்னன் ஒருவனுடைய வீரத்தை ஐம்பூதங்களோடும் ஒப்பிட்டு கூறுகின்றார் ஒரு புலவர்.

பகைவர் செய்யும் பிழைகளை நிலத்தைப் போன்று பொறுத்துக்கொள்கின்றான். அந்தப் பகைவரை எவ்வாறு ஒடுக்குவதென வானளவு சிந்திக்கிறான். பகைவரை அழிக்க அவன் கொண்ட நால்வகைப் படைகளும் காற்றுக்கு ஒப்பான வலிமையுடையன. பகைவரை அழிக்கும் அவன் ஆற்றல் நெருப்புக்கு ஒப்பானது. தம்மைப் பணிந்தவர்களிடம் நீர்போல அன்புடையவனாக இருக்கின்றான்.

நிலத்திடமிருந்து பொறுமையையும் வானத்தைப் போல பரந்த சிந்தனையையும் காற்றைப் போன்ற விரைவையும் தீயைப் போல அழிக்கும் தன்மையும் நீரைப் போல அன்புடைமையும் இயற்கையிடமிருந்து பழந்தமிழர் கற்ற பண்பாடுகளாகவே காணமுடிகிறது.

உலகைக் காக்கும் உயர்தொழில் உழவு. வித்திட்டு, பல்வேறு இடர்களினிடையே வளரும் பயரைக் காத்து நிறைவில் அறுவடை செய்து விளைவை வீட்டுக்குக் கொண்டுவரும் உழவர்கள் முதலில் நன்றி கூறுவது இயற்கையில் மூலவனான கதிரவனுக்குத்தான். தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். அது ‘ஞாயிறு போற்றுதும்’ என்ற கதிரவன் வாழ்த்துடனேயே தொடங்குகின்றது.

தமிழரின் தொன்மையான வாழ்வியல் கட்டுமானம் இயற்கையில் இருந்து, இயற்கையைச் சார்ந்தே உருவாக்கப்பட்டது. அக, புறப் பண்பாட்டுத் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் அதுவே காரணமாயிற்று. அனைத்துக்கும் இயற்கையே மூலம் எனக் கருதிய தமிழர், மொழி, மதம், நாடு, என்ற

(30ம் பக்கம் வருக)



கனடா மூர்த்தி

# கண்டதை மீண்டும் சொல்லுகிறேன் - 6

தந்தை செல்வா குறித்து சென்ற இதழில் எழுதியமைக்குக் காரணம் உண்டு. என்ன காரணம்? சிறீலங்கா நாடாளுமன்றத்தில் வயதிலும், அனுபவத்திலும் மிகவும் மூத்தவராயிருந்த ஒரு தமிழ்த் தலைவர் தனது இறுதி நாட்களில் செய்து காட்டிய தமிழ் ஈழம் சார்ந்த வழிநடத்தல் எப்படி இருந்திருக்கிறது என்பதைக் காட்டுவதற்கே அதை எழுதினேன். தந்தை செல்வாவின் மறைவின் பின்னர் அதற்கு அடுத்தடுத்து வந்த தமிழருக்கான தலைமைகள் இரண்டும், தமது வயதின் முதிர்ச்சிக்கு ஏற்றவகையில் தமிழ் ஈழம் என்ற கருத்தியலை உளச்சுத்தியுடன் அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முயற்சித்தார்கள். அதையும் நாமறிவோம். ஆனால் இன்று நடப்பது என்ன? தமிழ் ஈழத்திற்கான தேவை உணரப்பட்டாலுங்கூட அதை நோக்கி மக்களைக் கொண்டு செல்லும் பொறுப்பும், தலைமையும் எங்கும் தென்படுவதாயில்லை.

நமக்கான ஒரு தமிழ்த் தலைவரின் ஆளுமை - யானது, பிரிவினை அரசியல் அல்லது இணக்க அரசியல் இவற்றில் எதை அவர் கோரினாலும்கூட, தனித்துவமாகத் தெளிவுறத் தெரிய வேண்டும். அவர் முன்னிறுத்தும் செயல்பாடுகள் அவரது தலைமை யாரை எதிர்த்து அல்லது இறைஞ்சி நிற்கிறதோ அவர்களையே ஒருகணம் நெற்றிப் - பொட்டில் அறைந்ததுபோலச் சிந்திக்க வைக்கும் வகையில் அமைந்திட வேண்டும். பிரிவினை கோரிய மகாத்மா காந்தியின் செயல்பாடுகள் ஆங்கிலேயர்களை மிரளவைக்கவில்லையா. ஒற்றுமைக்காக செயல்பட்ட லீ க்வான் இயூவின் நடவடிக்கைகள் மலாய்க்காரர்களை உலுப்ப - வில்லையா. அதுபோல அரசியல் எதிரிகளையும் மதிப்புடன் திரும்பிப் பார்க்கவைக்கும் நாடாளுமன்ற தலைமைத்துவம்தான் இன்று தேவை. இல்லையேல் தமிழரைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

யாழ்ப்பாணம் செல்லும்போதெல்லாம் - நான் தங்கும் என் தம்பியின் வீடு நல்லூர் கந்தசாமி கோயிலை அடுத்து இருக்கின்ற காரணத்தால் - கோயிலை அண்டிய பகுதிகளில் அதிகாலை வேளைகளில் நடப்பது எனக்கு மிகவும் பிடித்த - மானதொரு வழக்கம். சூரியன் எழ முன்னரே, கோயில் கதவுகள் திறப்பதற்கு முன்னரே, கோயில் முன்றலில் நடந்துகொண்டிருப்பேன். அப்போது நான் காணும் காட்சிகள் தரும் மனக்கிளர்ச்சி - யானது சொற்களால் விளக்க முடியாதது.

அந்த அதிகாலை வேளையில், வீதியால் அவசரம் அவசரமாகச் செல்பவர்கள்கூட தமது வாகனங் களை நிறுத்திவிட்டு, கோயில் கதவு சாத்தியிருந் தாலுங்கூட கோயிலுக்கு முன்னே நின்று வணங்கிச் செல்வார்கள். குறிப்பாக இரண்டு கைகளையும் உச்சிக்குமேல் குவித்து சரணடைவதுபோல அவர்கள் வணங்கி நிற்பதும், உரிமையுடன் தமது கோரிக்கைகளை கந்தனிடம் சொல்லி விடை பெற்றுச் செல்வதும் என் மனதில் புல்லரிப்பை உருவாக்கி நிற்கும். அதுதான் நல்லூர்!

இந்த நல்லூர் கோயில்மீது மக்களுக்கிருக்கும் பக்திப் பரவசம் அளவிட முடியாதது. அதுபோல நல்லூர் கோயிலில் நாம் காணும் கட்டுப்பாடுகள் இலங்கையிலிருக்கும் வேறெந்த இந்துக் கோயிலிலும் காண முடியாதவை. அவற்றையெல்லாம் பார்க்கும்போது அரசியல் கட்சிகள்கூட இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தோன்றும். கட்டுப்பாடுகள் ஏன் வேண்டும்? நல்ல குருநாதன் நம்மை வருத்துவது கொல்லவல்ல, கொல்லவல்ல பொல்லா வினையறுக்க என்று ஒரு மரபுத் தொடர் இருக்கிறது. அதுபோலத்தான் ஒரு கட்சியானது கட்டுப்பாடு நிறைந்ததாக இருக்கவேண்டும். அதேசமயத்தில் கட்சியின் மீதும், அதன் மூலவர் மீதும் தொண்டர்களுக்கு உரிமை- கலந்த பக்தியும் இருக்க வேண்டும்.

இப்போதெல்லாம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு பிரமுகர்கள் எவராயினும் நல்லூர் கந்தசாமி கோயிலைத் தரிசிக்காமல் திரும்புவதில்லை. முஸ்லிம், கிறிஸ்தவ மதத்தவரும் பேதமின்றி வருகிறார்கள். அந்த அளவிற்கு நல்லூர் கந்தசாமி கோயில் ஒரு தமிழ் அடையாளமாகிவிட்டிருக்கிறது. அதற்கு என்னதான் காரணம்? வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு ஏற்றவகையில் தமக்கான அரசியலைச் செய்வதற்கு நல்லூர் கந்தசாமி கோயிலுடன் தன்னை அடையாளப்படுத்தவதுதான் சாலச் சிறந்தது என்று தற்போது அனைவரும் நினைக்கிறார்கள்போலும். தேசியமும், தெய்வீகமும் இணைந்த ஒரு குறியீடுபோல நல்லூர் ஆலயத்தின் நவீன அடையாளம் உருவாகி வருகிறது.





அண்மையில் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நல்லூருக்கு வருகை தந்திருந்தார். முருகனை வணங்கிவிட்டு, நல்லூரின் குருக்கள் ஒருவரை சந்திக்கவும் அவர் வேண்டினார். அதிசயமாக இருந்தது. யார் அந்தக் குருக்கள்? வேட்டைத் திருவிழாவின்போது முருகப்பெருமான் குதிரை வாகனத்தில் வேட்டைக்குப் புறப்பட தயாராக இருந்தபோது செங்கோல் ஏந்தி நல்லூரானுக்கு தனது கம்பீரமான குரலில் கட்டியம் கூறிநின்றாரே விஸ்வப் பிரசன்னாக் குருக்கள், அவரைத்தான் இந்திய நிதியமைச்சர் சந்திக்க விரும்பியிருக்கிறார். இன்றைய இந்தியாவின் சக்திவாய்ந்த அரசியல்வாதி ஈழ நிலப்பரப்பிற்கு வந்து ஒரு சிவாச்சாரியாரைப் பார்ப்பதற்கு ஆசைப்பட்டிருக்கிறார். ஆம். எந்தவொரு தமிழ் அரசியல் தலைவரையும் சந்திக்காத இந்திய நிதியமைச்சர் அந்த விஸ்வப் பிரசன்னாக் குருக்களை தேடிச் சந்தித்திருக்கிறார். அதில்தான் இப்போது நாம் தேடிக் கொண்டிருக்கும் தலைமைத்துவத்திற்கான சில கூறுகள் தென்படுகின்றன.

ஒரு தலைவர் அவர் செய்யும் கம்பீரமான செயல்களால் எல்லைகள் கடந்த நிலையில் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள முடியும். அவரது செயல்பாடுகள் அந்நியர்க - ளைக்கூட ஏதோ ஒரு அலைவரிசையில் தொட்டு, அவர்பால் மரியாதை கொள்ளவைக் - கும். இதையே விஸ்வப் பிரசன்னாக் குருக்கள் செய்து காட்டியிருக்கிறார். ஒருவேளை அன்று விஸ்வப் பிரசன்னாக் குருக்கள் ஏதேனும் கோரிக்கையை வைத்திருந்தால்கூட நிர்மலா சீதாராமனிடமிருந்து சாதகமான பதில் அவருக்குக் கிட்டியிருக்கும். இது சரணாகதி அரசியல் அல்ல. ஆகவே ஈழத்தமிழருக்காக அரசியல் செய்ய விரும்புவோர்

( 28ம் பக்கம் வருக )

## ஜனவரி பாரம்பரியத் திங்களை முன்னிட்டு இடம்பெறும் சிறப்புக் கட்டுரை

# தமிழர் பாரம்பரியத்தில் மரபுவழி உணவு

பண்டைய காலத்தில் தமிழர்கள் தமக்கென ஆரோக்கியமான ஓர் உணவுப் பாரம்பரியத்தைக் கொண்டிருந்தனர். சித்தர்கள் உணவு முறை பற்றி குறிப்பிடு - கையில், "எது உனக்கு உணவாக இருக்கிறதோ அதுவே மருந்தாக இருக்க வேண்டும். எது உனக்கு மருந்தாக இருக்கிறதோ அதுவே உனக்கு உணவாக இருக்க வேண்டும்" என்று குறிப்பிடுகின்றனர்.

ஒரு வருடமாவது சூரியன் சஞ்சரிப்பதை அடிப்படையாக கொண்டு உத்தராயணம், தட்சிணாயனம் என்று இரண்டாக வகுத்து நோக்கப்படுகின்றது. தைமாதம் முதல் ஆனி மாதம் வரையான ஆறு மாத காலப்பகுதிகளையும் உத்தராயணம் என்றும் ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையான காலத்தை தட்சிணாயணம் கொள்வர்.

இதில் உத்தராயணம் தைப்பொங்கலுடன் ஆரம்பமாகும். தட்சிணாயணம் ஆடிப்பிறப்புடன் ஆரம்ப மாகும். எனவே இவ்விரு காலங்களும் உணவுடன் தொடர்புடையதாய் பண்டிகை - களுடன் ஆரம்பமாவது குறிப்பிடத்தக்கது. ஆனால் நவீனத்துவ உலகிற்கு சவாலாக விளங்கும் நோய்களான நீரிழிவு, இருதய நோய்கள், புற்றுநோய்கள் போன்றன வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலான மக்களைப் பீடித்துள்ளன. ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைகளில் ஒன்றாக பிரதேசத்திற்குரிய பாரம்பரிய உணவு முறையை ஊக்குவித்தல் அமைகின்றது.



வேப்பம்பூ வடகம், வேப்பம்பூ பச்சடி, சித்திரைக்கஞ்சி, காய்ப் - பிட்டு, இலுப்பைப் பூ துவையல்,கருப்பணிக்கஞ்சி, இலைப்பிட்டு, தூதுவளை சூப், மொசுமொசுக்கை அடை, ஆடிக் கூழ், ஒடியற் - கூழ், அரிசிமாக்கூழ், ஊதுமாக்கூழ், பனங்காய்ப் பணியாரம், ஆலங்காய்ப்பிட்டு, பிடிக்கொழுக்கட்டை, தட்டுவடை, எள்ளுப்பாகு, வாய்ப்பன், கீரைப்பிட்டு, பொரியரிசிமா, முட்டைமா, பனாட்டு, நுங்கு, திணை, சாமை, வரகரிசிச்சோறு, குரக்கன் கழி, குர்க்கன் பிட்டு போன்ற உணவுப்பாரம்பரியம் தொன்று தொட்டு நிலவின.

தமிழர் சமூகம் நவீன நாகரிக மோகத்தால் துரித உணவில் நாட்டம் கொண்டு பாரம்பரிய உணவு முறைகளை மறந்து போகின்ற அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது முன்பு எல்லோர் வீட்டிலும் வாழை மரங்கள் இருந்தன. இத்தகைய பாரம்பரிய உணவுகள் இயற்கையான தாகவும் மலிவானதாகவும் கிடைக்க கூடியனவாகும். அவ்வாறே வாழையிலை உணவு உண்ண பயன்படுத்த துவங்கியதாக கூறப்படுகின்றது.

தொடர்ந்து அந்த வாழையிலையில் சூடான உணவு போட்டு சாப்பிடுகையில், குளோரோஃபில் என்ற பதார்த்தம் உணவுடன் கலந்து, உடலுக்கு ஊட்டச்சத்தை தருகின்றது. உணவு முறை - களை பாரம்பரிய முறைப்படி மண்சட்டி,வாழையிலை, தாமரை - யிலை போன்றவற்றை பயன்படுத்தி பரிமாறும் தன்மையானது சுற்றுலாத்துறையில் மீளவும் புத்துயிர் பெற்றுகின்றது. இவற் - றையே சுற்றுலாப் பயணிகளும் பெருமளவில் விரும்புகின்றனர்.

சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் தமிழர்கள் பின்பற்றும் பண்பாட்டு அம்சங்களில் ஒன்றே மருத்துநீர் வைத்து நீராடலா - கும். தாழம்பூ, துளசி,அறுகு, மாதுளம்பூ, வில்வமிலை,திப்பிலி, பால், மிளகு, மஞ்சள்,சுக்கு,பச்சைக் கற்பூரம், கோமயம், கோரோசணை, பீர்க்கு போன்ற மூலிகைச் சரக்குகள் இட்டுத் தயாரிக்கப்படும் மருத்துநீர் உடலுக்கு குளிர்ச்சியினை உண்டாக்கி தோல்நோய் வராமல் தடுத்து வெப்பகால பாதிப்பிலிருந்து உடலைப் பாதுகாக்கின்றது.

குழந்தை வளர்ப்பிலும் தமிழர்கள் தொன்றுதொட்டு சில பழக்கவழக்கங்களைக் கொண்டுள்ளனர். அவை குழந்தைகளுக்கு நோய் வராமல் தடுப்பதற்கும் ஏற்பட்ட நோய்களை தீர்ப்பதற்கும் அதன் மூலம் குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

துடக்கு எனக்கூறி குழந்தையை பிறர் தீண்டாது பாதுகாத்தல், கண்ணூறு அல்லது நாவூறு கழித்தல், கையில் வசம்பு கட்டுதல், திருஷ்டிப் பொட்டு வைத்தல், மூலிகை இலைகளை கொண்ட நீரில் குளிக்க வார்த்தல், சாம்பிராணி புகை காட்டுதல்,கிரந்தி எண்ணெய் வைத்தல், காது குத்துதல்,தோஷம் என மாலையில் குழந்தையை வெளியே கொண்டு செல்வதைத் தடுத்தல், அக்கிக்கு சிங்கம் வரைதல், அம்மை நோய்க்கு வேப்பிலை கட்டுதல், என்பன அவ்வாறு குறிப்பிடத்தக் கனவாகும்.

எந்த ஒரு விடயமும் ஏதாவது ஒரு வகையில் நன்மை பயப்பதாக அமையா - விடின் மக்கள் அதைத் தொடர்ந்து பின்பற்ற விரும்ப மாட்டார்கள். ஆனால் தமிழர்களு - டைய இத்தகைய நம்பிக்கைகள் மிகுந்த நம்பிக்கையுடன் பின்பற்றப்பட்டு வருபவையாக இருக்கின்றன. அவற்றுள் சில விஞ்ஞான பூர்வமாக ஏற்புடையதாக இருப்பதுடன் அர்த்தம் நிறைந்தனவாகவும் உள்ளன.

பூப்பெய்தும் பெண்கள் தொடர்பாகவும் தமிழர்கள் ஓர் உணவுப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளனர். பூப்பெய்தும் பெண்களைப் பார்க்கச் செல்லும் போதே தமிழர்தம் பாரம்பரிய பழக்கவழக் - கங்களின் அடிப்படையில் நல்லெண்ணெய், முட்டை,ஊரரிசி போன்றவற்றைக் கொண்டு செல்வர். இவைதவிர, கத்தரிப்பிஞ்சு, மீன், மஞ்சள், வேப்பிலை, எள்ளு, உழுந்து போன்ற உணவு வகைகளையும் பயன்படுத்துவர்.இவை யாவும் பிற்காலத்தில் பெண்களின் மகப்பேறிற்கு வலுச்சேர்ப்பனவாக உள்ளன.

இவற்றை இன்றைய தலைமுறையினர் கடைப்பிடிக்கத் தவறியதனால் இந்தியா போன்ற நாடுகளுக்கு மருத்துவம் செய்வதற்காக ஏராளமானவர்கள் பல இலட்சம் ரூபாயை செலவு செய்து குழந்தைப் பேறிற்காக தவம் கிடக்கின்றனர்.

பாரம்பரியமாக செய்யப்பட்டு வரும் தொழில்களும் இன்று நமது மரபுகளாகவே காணப்படுகின்றன. இவை மக்களின் அன்றாட வாழ்வாதார அம்சமாக உள்ளன. அந்த வகையில் மட்பாண்டம் வனைதல், கயிறு திரிதல், செக்கு ஆட்டுதல், ஓட்டுத் தொழிற் - சாலை, பீடிசுற்றுதல், சுருட்டும் கைத்தொழில், கிடுகு பின்னுதல், ஓலைப்பெட்டி இழைத்தல், வலை பின்னுதல், மாட்டுக்கு டில் கட்டுதல், நெசவுத் தொழில், சாணை பிடித்தல், கைப்பொருள் விற்பனை, பனைமட்டை வியாபாரம், தள்ளுவண்டி வியாபாரம், பால் விற்பனை,கள்ளு இறக்குதல், ஓலைப் பெட்டி இழைத்தல்நெல்லுக் - குற்றல், என அடுக்கிக் கொண்டே போகலாம்.



முனைவர் பால. சிவகடாட்சம்

# படித்ததும் கேட்டதும் 68

## அந்தரிக்கும் அப்பாவி ஜீவன்கள்

ஒரு போர் வெடிக்கும் போது, போரிடும் கட்சிகளுக்கு ஆதரவாகவும் எதிராகவும் பலர் பேசுவதை நீங்கள் காணலாம். யுத்தபூமியில் சிக்கித் தவிக்கும் அப்பாவி உயிர்களின் அவலத்தைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. போர் எதற்காக நடை - பெறுகின்றது என்பதை அறியாமல், தம்மைச் சுற்றி நடப்பதைப் புரிந்துகொள்ளாமல் ஏங்கித் தவிக்கும் குழந்தைகளையும் இழப்பு பயம் பட்டினி என்பவற்றுடன் அல்லல்படும் அப்பாவிப் பெண்களையும் மட்டுமல்லாது, யுத்தபூமிக்குள் அகப்பட்டுக்கொண்டு அந்தரப்படும் விலங்குகளையும் நினைத்துக் கலங்குகிறார் ஒரு சங்கத்தமிழ்ப் புலவர். தனது பங்காளியான சோழன் நலங்கிள்ளிக்குப் பயந்து உறையூரின் அரண்மிகுந்த கோட்டைக்குள்ளே பதுங்கியிருக்கும் சோழன் நெடுங்கிள்ளியை நோக்கி கோவூர் கிழார் என்னும் புலவர் பாடிய பாடல் இது.

இரும்பிடித் தொழுதியொடு பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு நெய்ம்மிதி பெறாஅ
திருந்தரை நோன்வெளில் வருந்த வொற்றி
நிலமிசைப் புரளுங் கைய வெய்துயிர்த்
தலமரல் யானை யுருமென முழங்கவும்
பாலில் குழவி யலறவு மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவு நீரில்
வினைபுனை நல்லி லினைகூஉக் கேட்பவும்
இன்னா தம்ம வீங்கினி திருத்தல்
துன்னருந் துப்பின் வயமான் றோன்றல்
அறவை யாயி னினதெனத் திறத்தல்
மறவை யாயிற் போரொடு திறத்தல்
அறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதி லொருசிறை யொடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங் காலே.
- புறநானூறு 44

“பெண்யானைக் கூட்டத்தோடு பெருங்குளத்தில் நீராடமுடியாமல், நெய் கலந்த சோற்று உருண்டை கிடைக்காமல், பிணைக்கப்பட்டுள்ள உறுதியான தூணை இழுத்து வருந்தி, நிரம்பிய துயரத்துடன் தும்பிக்கையைத் தரைமேல் துழாவும் யானை வெப்பப் பெருமூச்சுவிட்டு இடிபோன்ற சத்ததுடன் பிளிறுவதையும், குழந்தைகள் பால் கிடைக்காது அழுவதையும், பெண்கள் பூக்கள் இல்லாத வெறும் கூந்தலை முடிந்து கொள்வதையும், தண்ணீருக்குத் தவிக்கும் கூக்குரல்களையும் காணவும் கேட்கவும் நேரிட்ட பின்னரும் இங்கே நிற்பது கொடுமை.

வலிமையான குதிரையுடைய அரசனே, நீ அறவழி நிற்க விரும்பினால் கோட்டை அவனுக்கு உரித்தானதே என்று அறிவித்துவிட்டுக் கோட்டைக்கதவைத் திறந்துவிடு. வீரத்தை வெளிப் - படுத்த விரும்பினால் எதிரியை எதிர்கொள்ள கோட்டைக்கதவைத் திறந்துவிடு. இந்த இரண்டில் எதனையும் செய்யமறுத்து நீண்ட மதிலும் மூடப்பட்ட கதவும் உடைய கோட்டையின் உள்ளே அடைபட்டுக் கிடப்பாயானால் அது வெட்கப்படவேண்டிய விடயம்”.

## Hapless Innocent Souls

When a war erupts, you will often hear many people expressing both support and opposition to the warring parties. Nonetheless, a limited number of individuals take into account the grave predicament experienced by innocent people trapped in the midst of the conflict.

A poet from the Sangam era was profoundly disturbed not only by the plight of children who yearned and suffered without comprehending the turmoil surrounding them, and the innocent women enduring grief, loss, fear, and hunger but also by the plight of animals trapped in the midst of war. This is a song sung by the poet Kovoor Kizar to Cholan Nedunkilli, who is hiding inside the fortified fort of Uraiyur due to his fear of his partner, Cholan Nalankilli.





“Unable to bathe in the big pond with a herd of female elephants and unable to obtain a ball of rice mixed with ghee, the ravenous elephant strains the sturdy pole to which it is tied. Filled with grief it swings its trunk on the ground, pants heavily and roars like thunder. Children cry due to the lack of milk, and women tie their hair, which is devoid of flowers. After witnessing these scenes and hearing the cries of those who long for water, it is painful to remain here any longer.

O King of mighty horses, if you wish to uphold virtue, declare that this castle belongs to him and open the gate. If you want to display your courage open the gate and face the war. Refusing to take either of these actions and hiding within a fortress, ensnared by long walls and bolted doors, it is disgraceful to see.”
- Purananuru 44



## ‘கனடிய அனுபவம்’ விரைவில் நீக்கப்படலாம்!

கனடாவில் எவராவது அரசதுறை மற்றும் தனியார்துறை பணிகளுக்கு விண்ணப்பிக்கும்போது அவர்களிடம் முன்னைய கனடியப் பணி அனுபவம் கேட்கப்படுவது கட்டாயமாக இருந்து வருகிறது. வருங்காலத்தில் இந்தக் கேள்வியை நீக்குவது பற்றி ஒன்ராறியோ அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது. பெரும்பாலும் இந்த மாத இறுதிக்குள் இது தொடர்பான முடிவை ஒன்ராறியோ அரசு எடுக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.



## அதிரனின் நயனவழி

03

# மனிதாபிமானம் மரணிக்கவில்லை

கோவிட் 19க்குப் பின்னர் உருவான எதிர்பாராத நெருக்கடி உலகம் முழுவதும் பலமான பொருளாதார பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதில் வளர்ந்த நாடுகள், வளர்முக நாடுகள், வளர்ச்சியடையாத நாடுகள் என்று எந்த வித்தியாசமும் இல்லை.

எல்லா நாடுகளும் பணவீக்கத்தில் சிக்கியுள்ளன என்று கூறினால், அதன் தாக்கம் அப்பாவிப் பொதுமக்களையே நேரடியாக பாதிக்கிறது. வீடு விலை - அடமான வட்டி அதிகரிப்பு, வீட்டு வாடகை உயர்வு, எரிபொருள் உச்ச நிலை, உணவுப் பொருட்களின் விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களான தட்டுப்பாடு என தாக்கங்கள் பலவாறாக உள்ளன.




நாம் வாழும் கனடாவும் இவைகளுக்கு விதி விலக்கில்லை. நாளொன்றுக்கு மூன்று வேளை உணவில் ஒரு வேளையை பலர் தவிர்க்க நேர்ந்துள்ளது. பத்துப் பேரில் ஒருவர் உணவு வங்கியை நாடும் நிலை உருவாகியுள்ளது. மாணவச் சிறார் பெரும்பாலானவர்கள் பாடசாலைகளில் வழங்கப்படும் காலை உணவை நம்பிச் செல்கின் - றனர். போதிய போசாக்கின்மையால் இளம் பராயத்தினர் பாடசாலைக் கல்வியில் முழுமையாக ஈடுபாடு காட்ட முடியாதிருப்பதாக பல அறிக்கைகள் தெரிவிக்கின்றன. உணவு வங்கியை நாடுவோர் தொகை 300 மடங்கி - னால் அதிகரித்திருப்பதாகவும், உணவு வங்கியை நம்பியே பல குடும்பங்கள் வாழ ஆரம்பித்திருப் - பதாகவும் இதன் நிறைவேற்று இயக்குனர் ஊடகச் செவ்விகளில் தெரிவித்து வருகிறார்.

நாட்டின் பிரதான உணவு விற்பனை நிலையங்கள் அவர்களுக்குக் கிடைக்கும் லாபத்தைக் குறைத்தால் கட்டுபடியான விலையில் பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை பெற முடியுமென்று கனடாவின் சகல அரசியல் தலைவர்களும் கட்சி பேதமின்றி வேண்டினர். இதற்கென அங்காடி ‘முதலை’களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினர். சாதகமாக எதுவும் இடம்பெறவில்லை.

மாறாக, மிகப்பெரிய உணவுப்பொருள் விற்பனை நிலையமொன்றின் இவ்வருட மூன்றாவது காலாண்டுக்கான லாபம் 62 மில்லியன் டாலர் என அறிவிக்கப்பட்டுள்ளது.


கனடாவில் அண்மைக் காலத்தில் அதிகமாகக் குடியேறிய சர்வதேச மாணவர்களில் பெருந்தொ - கையானோர் உணவு வங்கியை நாடிச் செல்வதாக ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகை கடந்த மாத 17ம் திகதிய இதழில் முதற்பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

கனடிய அரசாங்கங்கள் இவ்விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்கத் தவறின் இளம் சமூகத்தினர் உடல்நல பாதிப்புக்குள்ளாகி, முதுமை உணர்வை முற்கூட்டியே அடையும் அபாயம் ஏற்படலாமென அஞ்சப்படுகிறது.

சமவேளையில் மனிதாபிமான செயற்பாடுகள் சிலவற்றையும் ஆங்காங்கே காணக்கூடியதாகவுள்ளது. ரொறன்ரோவிலுள்ள அங்காடி விற்பனை நிலையமொன்றில் அசாதாரணமான அறிவித்தல் பலகையொன்று ஆச்சரியத்தைத் தந்தது (முதலாவது படம்). ஒவ்வொரு வருடமும் கனடியக் குடும்பமொன்று உணவுப் பொருட்களை விரயமாக்குவதால் சுமார் ஆயிரம் டாலர்கள்வரை இழக்கப்படுவதாக இதில் எழுதப்பட்டிருக்கிறது.

தங்களின் விற்பனைப் பொருட்களில் விரைவில் பழுதாகி விரயமாகக்கூடிய சில பொருட்களை (முக்கியமாகப் பழங்கள், மரக்கறி வகைகள்) சிறு சிறு பைகளில் போட்டு கட்டி, குறைந்த விலையில் இங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. சேதமாகி குப்பைக்குப் போகாமல் குறைந்த விலையிலாவது பாவனையா - ளர்களை சென்றடையட்டும் என்ற நன்னோக்கு இங்கு தெரிகிறது.

ரொறன்ரோவிலுள்ள தனியார் வணிக நிலையமொன்று அதன் முகப்புக்கு வெளியே குளிர்சாதனப் பெட்டியொன்றை 24 மணிநேர சமூக இலவசப் பாவனைக்கு வைத்துள்ளது (இரண்டாவது படம்). இதற்கு Community Fridge (சமூக குளிர்சாதன பெட்டி) என்று பெயரிடப்பட்டுள்ளது. இது முழுமையாக பொதுமக்களின் பாவனைக்கானது.




விரும்பும் எவரும் தாங்கள் விரும்பும் உணவுப் பொருட்களை இதற்குள் வைத்து விடலாம். அதேபோன்று தேவையானவர் - களும் அதற்குள் இருப்பவைகளை எடுத்துச் செல்லலாம். சமூக பயன்பாட்டுக்கு இன்றைய காலநிலையில் ‘கொடுப்பதும் எடுப்பதும்’ என்றவாறு மனிதாபிமான அடிப்படையில் இந்தக் குளிர்சாதனப் பெட்டி உதவி வருகிறது. நெருக்கடியான காலத்தில் இவ்வகையான சிந்தனை வயப்பட்டு குளிர்சாதனப் பெட்டியை 24 மணிநேர பொதுமக்கள் பாவனைக்கு வைத்துள்ள வணிகர் உண்மையிலேயே அனைவரதும் பாராட்டுக்குரியவர்.

நெருக்கடி காலத்தில் இவ்வகையான செயற்பாடுகள் வரவேற்புக்குரியவை. மனிதாபிமானம் முழுமையாக மரணித்து விடவில்லையென்பதை இந்தக் குளிர்சாதனப்பெட்டி தெரிய வைக்கிறது.



ப. ஸ்ரீஸ்கந்தன்

# ஞாபகம் துளிர்க்கிறதே !

31

## என் சினிமா உலகம்

அந்நாளில் சினிமாப் படங்களின் அறிவிப்புச் செய்யும் வாகனங்களின் பின்னால் ஓடி நோட்டீசை வாங்குவது, கல்யாண வீடுகளில் படப்பிடிப்பாளர் கீழே போடும் சுட்ட பல்புகளைப் பொறுக்குவது, கண்ணாடித் துண்டில் பெயரை தலைகீழாகவும் வலம் இடமாகவும் எழுதிவிட்டு டோர்ச் லைற் அடித்து சுவரில் பெயரை விழச்செய்வது என்று சினிமா மோகம் அமோகமாக இருந்தது.

நண்பர்களோடு இரவு இரண்டாம் காட்சிகளுக்குச் சென்று பழைய படங்கள் பார்ப்பது எனக்கு மகிழ்ச்சிகரமான பொழுதுபோக்கு. யாழ்ப்பாண தியேட்டர்கள் பத்து நிமிட சைக்கிளோட்ட தூரத்தில் இருந்ததால் எல்லாம் வசதியாக இருந்தது. கலரியில் இருந்து படம் பார்ப்பது தனி சுகம். அப்போது டிக்கற் 65 சதம். வெலிங்டன் தியேட்டரில் பார்த்த கர்ணன் படத்தில் கர்ணனின் மடியில் முனிவர் படுத்திருக்க, வண்டு ஒன்று கர்ணனின் காலைக் கிழித்து வெளியேறும். அதன்போது சீறிய இரத்தம் என் முகத்தில் அடித்ததுபோல் இருந்தது. திரைக்கு மிக அருகில் இருந்து அண்ணாந்து பார்க்க வேண்டும்.

இணுவிலில் உள்ள சிறீகாலிங்கன் வரை பழைய படங்கள் பார்க்கச் சென்றிருக்கிறேன். கலரியில் வாங்குகள் போடப்பட்டிருக்கும். கீழே வெற்றிலைத் துப்பல் இருக்கிறதா என்று பார்த்துக் காலை வைத்திருக்க வேண்டும். அங்குதான் தாமரை நெஞ்சம், நெஞ்சம் மறப்பதில்லை, துலாபாரம், இரத்தக் கண்ணீர் மற்றும் பீம்சிங்கின் பாசமலர் போன்ற 'ப' வரிசைப் படங்களை பார்த்தேன்.

இரவு இரண்டாம் காட்சி முடிந்து முன்னாலுள்ள கடையில் ரொட்டியும் ரோஸும் வாங்கிச் சாப்பிட்டு வீடு சேர இரண்டு மணியாகிவிடும். ஒருமுறை வரும் வழியில் டபிள் போனதற்காக பொலிசார் சைக்கிளின் காற்றைத் திறந்துவிட்டார்கள். அன்று வீடு சென்று சேர விடிந்து விட்டது.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் ராணி, ராஜா, வெலிங்டன், வின்ஸர், றீகல், மனோகரா ஆகிய திரையரங்குகள் இருந்தன. றீகலில் ஆங்கிலப் படங்களும், மனோகராவில் பழைய படங்களும் ஓடின. வின்ஸரில் மட்டும் ஏ.சி. இருந்தது. எமது பின்னைய நாட்களில் ஹரன், ஸ்ரீதர், சாந்தி, லிடோ ஆகிய திரையரங்குகள் புதிதாய் முளைத்தன.

இன்று போலவே அன்றும் ரசிகர்கள் சிவாஜி - எம்.ஜி.ஆர்., கமல் - ரஜினி என்று பிரிந்து இருந்தனர். எனினும் எனது ஆதர்ச நடிகராக நாகேஷ் இருந்தார். அற்புதமான நடிகன். இவர் கதாநாயகனாக நடித்த பாலச்சந்தரின் நீர்க்குமிழி படத்தை ஒன்பது தடவைகள் மனோகரா தியேட்டரில் பார்த்தேன். கன்னி நதியோரம் என்ற பாட்டுக்கான அவரது நடனம், ஆடி அடங்கும் பாட்டுக்கான நடிப்பு மறக்க முடியாதவை. சாந்தி தியேட்டரில் நடைபெற்ற திரைப்பட விழாவில் காட்டப்பட்ட ஜெயகாந்தனின் 'யாருக்காக அழுதான்?' படத்தில் அவரின் நடிப்பு உச்சமாக இருக்கும்.

மக்களை மகிழ்விக்கும் இந்த சினிமா நடிகர்களை நேரில் பார்க்க வேண்டு - மென்ற ஆசை எல்லோரைப் போல் எனக்கும் இருந்தது. யாழ்ப்பாணத்தில் இருக்கும்வரை அது குதிரைக் கொம்புதான்.

1975ம் ஆண்டு என நினைவு. நான் கொழும்பு சென்றிருந்த சமயம் எனது ஆதர்ச கலைஞர் நாகேஷ் அவர்களை நேரில் பார்க்கிற வாய்ப்பு கிடைத்தது. திரைப்பட காட்சியொன்றில் நடிக்க வந்தவரை கொழும்பு தமிழ்ச் சங்கம் பேச்சுக்கு அழைத்திருந்தது. லயனல்வென்ற் கலையரங்கில் அந்தக் கூட்டம் இடம்பெற்றது. வாழ்வில் வெற்றி பெறுவது எப்படி என்ற தலைப்பில் தனது வாழ்வைத் தொடர்புபடுத்தி இரு மணி நேரம் உரையாற்றினார். பேச்சு சுவையாகவும், தத்துவார்த்தமாகவும் இருந்தது.

கனடா வந்த பின்னர் சினிமாக் கலைஞர்களைக் காண்பது இலகுவானது. ஒருமுறை நிகழ்ச்சிக்காக இங்கு வந்த நடிகர் விஜயை பணப்பரிமாற்றம் செய்வதற்காக நண்பர் அசோகன் எனது வேலைத்தளத்துக்கு அழைத்து வந்தார். காதலுக்கு மரியாதை போன்ற படங்களில் நடித்துக் கொண்டிருந்த காலமது. அமைதியாகவும், அடக்கமாகவும் இருந்தார். அதிகம் பேசவில்லை.

2002ல் ஸ்காபரோவில் ஐங்கரன் வீடியோ கடை திறப்பு விழாவுக்காக வந்திருந்த நடிகர் விஜயகாந்தை மிக அருகில் நின்று பார்த்தேன். மொழு மொழுவென்று அழகாக இருந்தார். அவரைக் காண ரசிகர்கள் அலை - மோதியதில் அசம்பாவிதமாகி அவரைப் பின்வாசல் வழியாக, அவசரமாக அனுப்ப வேண்டியதாகி விட்டது.

இந்தியா சென்றிருந்தபோது கல்யாண மண்டபம் ஒன்றில் சூட்டிங் பார்க்க வாகன சாரதி அழைத்துச் சென்றிருந்தார். வாசலில் பிரபு, கார்த்திக், விஜயகுமார் போன்ற பலர் இருந்தனர். படத்தின் பெயர் குஸ்தி. உள்ளே வடிவேலின் காட்சிகள் படமாக்கப்பட்டுக் கொண்டிருந்தன. கிடைத்த இடைவேளையில் அவரோடு பேசினேன்.

இன்னொரு நாள் தஞ்சைப் பெரிய கோயிலுக்குப் போனபோது ஒரே கூட்ட - மாக இருந்தது. கோயிலின் வடக்கு வீதியில் படப்பிடிப்பு. படம் 'டும் டும் டும்'. மாதவனும் ஜோதிகாவும் நடித்திருந்தனர். தேசிங்கு ராஜா.... தஞ்சாவூரு ராணி என்ற பாடலின் நாலு வரிகளைப் படமாக்கினர். ஏகப்பட்ட நடிக நடிகைகள்.

"வண்...ரூ...த்றீ....ஃபோர்
தேசிங்கு ராஜா...."

பாட்டைப் போட்டார்கள். கட் கட் என்றார்கள். திரும்பத் திரும்ப பாட்டு போடப்பட்டது. பாட்டின் நாலு வரியை எடுத்து முடிக்க மூன்று மணி நேரமானது. இன்னும் நான் உள்ளே சென்று சிவனைப் பார்க்கவில்லை. அன்று இரவு முழுவதும் தேசிங்கு ராஜா....1...2...3...4 மனத்திரையில் இரைந்து கொண்டிருந்தது.

கனடாவில் தியேட்டரில் அந்தப் படத்தை பார்த்தேன். மூன்று மணிநேரம் படமாக்கிய அந்தக் காட்சி பத்து செக்கன்களில் திரையில் மறைந்து போனது.

# ஈர நினைவுகளுடன் பாரெங்கும் மாவீரர் விழா



தமிழீழ மண்மீட்புக்காகவும் தமிழர் உரிமைக்காகவும் போராடி மண்ணுள் விதையான மாவீரர் நினைவு நாள் நவம்பர் 27ம் திகதி பாரெங்கும் இடம்பெற்றது. மாவீரர் பெற்றோர் உறவுகளுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வுடன் ஒரு வாரத்துக்கு இடம்பெற்ற வைபவங்களின் இறுதி நாளாக மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டது. தாயகத்தில் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்ட சில தடைகளையும் தாண்டி உணர்வு - பூர்வமாக மாவீரர் வணக்கத்தை மக்கள் மேற்கொண்டனர்.











# விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூல் அறிமுக விழா









ஒலி, ஒளி ஊடகர் பி.விக்னேஸ்வரனின் ஐம்பதாண்டு கால அனுபவப் பகிர்வான 'நினைவு நல்லது' நூல் அறிமுக விழா கடந்த மாதம் நான்காம் திகதி ஸ்காபரோவில் இடம்பெற்றது. திரு. துஷி ஞானப்பிரகாசம் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். ஊடகத்துறை சார்ந்த பலரின் வாழ்த்துரைகள் ஆரம்பத்தில் இடம்பெற்றது. கனடாவில் ஒலி, ஒளி ஊடகத்துறையில் இரு தசாப்தங்க - ளாகப் பணியாற்றிய திரு. உதயன் எஸ்.பிள்ளை நூலை அறிமுகம் செய்து உரையாற்றினார். நூலாசிரியர் ஏற்புரையும் நன்றியுரையும் நிகழ்த்தினார். கலை இலக்கிய ஊடகத்துறை சார்ந்த பெருமளவானோர் நிகழ்வில் பங்குபற்றி விழாவைச் சிறப்பித்தனர்.









(31ம் பக்கம் வருக)

# 33வது ஆண்டு பூர்த்தி மலர்

## கட்டுரைகள் டிசம்பர் 22 வரை ஏற்கப்படும்

தமிழர் தகவலின் 33வது ஆண்டு மலர் தயாரிப்புப் பணி ஆரம்பமாகி விட்டது. சுமார் ஐம்பது வீதமான கட்டுரைகள் இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளன. வழமையாக எழுதுபவர்கள் சிலரின் வேண்டுகோளுக்கிணங்க கட்டுரைகளை ஏற்கும் இறுதி நாள் இந்த மாதம் (டிசம்பர்) 22ம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது. கணினியில் அச்சடிக்கப்பட்ட கட்டுரைகளை tamilsinfo@sympatico.ca என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கையெழுத்துப் பிரதிகளை, Thiru S. Thiruchelvam, P.O.Box - 3, Station - F, Toronto, Ontario. M4Y 2L4 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேலதிக விபரங்கள் தேவைப்படின் 416 - 920 - 9250 என்ற இலக்கத்தில் பெயரையும், தொலைபேசி இலக்கத்தையும் பதிவு செய்தால் தாமதமின்றி தொடர்பு கொள்ளப்படும்.

# கனடா திருமறைக் கலாமன்றத்தின் ‘கலைப்பாலம்’

வெள்ளிவிழாக் கண்ட கனடா திருமறைக் கலாமன்றத்தின் 2023ம் ஆண்டுக்கான ‘கலைப்பாலம்’ நிகழ்வு அக்டோபர் 22ம் திகதி ஸ்காபரோ கந்தசாமி கோவில் கலாமண்டபத்தில் நிகழ்ந்தது. மன்றத்தலைவர் திரு. எலியாஸ் அருளானந்தம் தலைமையிலான இவ்விழாவில் வரவேற்பு நடனம், பறை இசை, தனி நடிப்பு, கோலாட்டம், நாட்டுக்கூத்து என பல நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன. தாயகத்திலிருந்து வருகை தந்த திருமறைக் கலாமன்ற உதவி இயக்குனர் திரு. அன்ரன் ஸ்ரீபன் பிரதம விருந்தினராக பங்கேற்று உரையாற்றினார். அருட்பணி சார்ள்ஸ் கொலின்ஸ், சிவசிறீ கிருஷ்ண பங்குசக் குருக்கள் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தாயகத்திலிருந்து வருகை தந்த தலைசிறந்த கலைஞர் பல்கலை வேந்தன் ஜஸ்ரின் தைரியநாதனின் தனித்துவ நடிப்பு மேடையேறிய நாட்டுக்கூத்துகளை மேன்மைப்படுத்தியது. கனடா திருமறைக் கலாமன்றம் இவருக்கு பட்டம் சூட்டி மதிப்பளித்ததையடுத்து, தமிழர் தகவல் வெளியீட்டகத்தின் சார்பில் கலைஞர் ஜஸ்ரின் தைரியநாதனுக்கு தகவல் முதன்மை ஆசிரியர் தங்கக் கணையாழி சூட்டி கௌரவம் வழங்கினார்.














# வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?


அனுபவசாலிகளின் ஆலோசனை
பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION



**Even if the accident is your fault:**

Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist



WE ARE HERE TO HELP YOU


இலவச ஆலோசனைகளுக்கு:

தீபன்

24 Hours Direct Line

(416) 831-4444
(416) 505-9804

2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6


MEDCENTRE HEALTH
SYNCHRONIZING HEALTH SECTORS
MARKHAM MCNICOLL URGENT CARE CENTRE (MMUCC)
2901 Markham Rd Scarborough, ON M1X 0B6
(Markham and McNicoll Intersection)
MORE DOCTORS, MORE CARE
MMUCC now has more doctors to serve you. Unit 11 has expanded to Unit 6 as well.
The number of doctors working in the Walk-In Clinic / Urgent Care have increased to seven (07) recently.
We will continue to open all 365 days a year. Patients Walk-In without appointment can self-register at the clinic.
The existing online booking from 12am for the same day appointment, will continue for both unit clinics as before @ medcentrehealth.com
Visit us today and experience the convenience & excellence of MEDCENTRE HEALTH
MARKHAM MCNICOLL URGENT CARE CENTRE (MMUCC)
Walk-In Clinic (வோக் இன் கிளினிக்) மற்றும் Urgent Care (துரித மருத்துவ சேவை).
இதுவரை காலமும் Unit 11 ல் ( யுனிட் இலக்கம் 11ல்) மட்டும் இடம்பெற்று வந்த மருத்துவ சேவைகள், இப்போது Unit 6 & 11 ( யுனிட் 11 உடன் 6 ம் யுனிட்டுமாக இரண்டு யுனிட்டிகளுக்கும்) விரிவாக்கப்பட்டுள்ளது.
இந்த கிளினிக்குகளில் பணியாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கையும் ஏழாக (7) அதிகரிக்கப்பட்டுள்ளது.
வழமைபோல ஒன்லைன் (online) வழியாக முற்கூட்டியே பதிவு (Book) செய்யலாம்.
அல்லது நேரடியாக வருகை தர முடியும்.
+1 416-609-3333
medcentrehealth.com




# உங்களிடம் ..

## செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?

## உங்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி!

வணிக உரிமையாளர்களும் சுயதொழில் செய்வோரும்
வருமான மதிப்பீடுகள் இல்லாமல் மாதந்தோறும் $5000 வரை
அங்கவீனக் காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.



**அஜித் சபாரட்ணம்**

**647-401-5800 | 416-439-2800**

10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

Chapel Ridge

FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை
உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



### *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

*• Vistation • Funeral & Memorial Service*
*• Reception • Burial • Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை





**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**


- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

*A caring part of our community*


AGA
Beauty Skin SPA & Tranning Center
15, Karachi Drive, Unit 5, Markham On L3S0B5
Body & Face Cream On Sale
Call : 647-716-5252
Defining Beauty with style
Beauty Services
Threading
Waxing
Facial
Hair Cutting
Hair Colouring
Hair Care
Protein Treatment Head
Weight Loss program
bridal
Makeup & Hair style
Henna Designs
Eye Lash Extensions
Skin Tag Removal
Microdermabrasion
Certificate Courses
Hair Styles
Makeup
Bridal
Esthetician Courses
Threading
Waxing
Facial
Hair Care
Hair Colouring
Protein Treatment Head
Eye Lash Extensions
Skin Treatment
Microdermobrasion
Chin Lifting
Saree Wrapping
Saree Blouse Making
ARAJEN BEAUTY & SKIN CARE
2607 Englinton ave east, Unit 4,6,7, Scarbarough, On M1K2S2


JRB GROUP CORPORATION
Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling
Best rate Mortgage Arranged
Almost All Services Available
Business Loans 25K to 500,00
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!
FINANCE
R. R. Rajkumar B. Com (Hons), MBA
647–289–6164 / 416–655–5577


Build Your Dream Home
SABESAN'S
CHOICE
We build 10,000sq. feet (minimum)
warehouse from 139.00 per sq.feet.
உங்கள் வீட்டுடன்
இணைந்ததாக
மேலதிக இருப்பிட
வசதியை ஏற்படுத்த
விரும்புகிறீர்களா?
எம்முடன் தொடர்பு
கொள்ளுங்கள் !
400 Kilometre per hour
Wind resistance.
Termite Proof
Compare traditional Building
Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
Sabesan
விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# KEV TAX

KNOWLEDGE & EXPERIENCE IS VITAL

www.kevtax.com



FREE EFILE SERVICE

- CORPORATE INCOME TAX
- BOOKKEEPING & ACCOUNTING SERVICES
- PERSONAL INCOME TAXES
- QUALITY SERVICE WITH REASONABLE FEES
- FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
- CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION

SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE

Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)

TEL: 416.841.1866
FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com





List your property with me...

To Book Your Pre Construction Homes & Condo

FREE - Home Evaluation
FREE - Home Staging
FREE - Professional Photography
FREE - Social Media Marketing

HOMELIFE
HIGHER STANDARDS
Homelife/Future Realty Inc.

HomeLife/Future
Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977

MLS



CALL YOUR PROFESSIONAL SERVICE

Rave
P. Raveenthiran
Broker

Dir: 416-567-2462

Email: realtor.rave@gmail.com


Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620


ABIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
அபிராமியின் வாழையிலை விருந்து
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)


முருகன் புத்தகசாலை
MURUGAN
BOOK STORE
K. Makesan
Manager
5215 Finch Ave E #109, Scarborough ON
mahesan.ka@gmail.com
416 321 0285


Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


சிவஸ்ரீ
சிவ. ஜனார்த்தன
குருக்கள்
647-449-6542
aarthananyathu@gmail.com
aarthanan@hotmail.com


KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197


8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream

# Canada to Stabalize Immigration Levels



In response to the strain on housing and public services, the Canadian government has made plans to stabilize the intake of new permanent residents by 2026, Immigration Minister Marc Miller has announced.

Minister Miller presented the immigration objectives for the forthcoming three years, proposing to maintain the number of new permanent residents at a constant figure of 500,000 for the year 2026.

According to the proposed agenda, there will be a gradual increase in the targets for 2024 and 2025, with figures reaching 485,000 and 500,000 respectively.

Over the past few years, the Liberal government has markedly escalated its immigration targets, setting new records for the admission of permanent residents in both 2021 and 2022.

This policy of increased immigration has been subject to critical examination due to the challenges posed by a national housing shortage and the demand for more affordable housing options.

Minister Miller acknowledged the dual nature of the situation, highlighting the vital role immigrants play in bolstering Canada's economic development and workforce, while also recognizing the need to manage their effect on the nation's infrastructure, including housing.

He addressed these nuanced points at a news conference on Parliament Hill this week, asserting, "These immigration levels are designed to contribute to Canada's economic and demographic expansion, while also tempering the pressure on essential services like infrastructure and housing."

The Royal Bank of Canada said while the pause in targeted immigration levels was appropriate given housing challenges and eroding public support, Canada would need immigrants in the long term.

The annual immigrant intake of 1.3% of the population was not sufficient to stabilize the age structure of the population, which would require immigration of about 2.1%, the country's top lender said in a report.

Canada's population has grown mainly through immigration, and population growth has helped fuel economic growth in recent years.

Some economists have blamed immigration for worsening the country's housing shortage, even though some immigrants also work in industries like construction that are facing a labour shortage.

For this reason, the Bank of Canada has said immigration has been both a driver and a brake for inflation, which stood at 3.8% in September.

More consumers mean more demand, which pushes up prices, but immigrants entering the workforce also help keep down labour costs.

A strong inflow of immigrants helped Canada's population to grow last year at its fastest pace since 1957, placing it among the top 20 fastest-growing countries in the world, Statistics Canada said, in part offsetting the effects of aging residents who are retiring and adding to healthcare costs.

An increasing number of newcomers to Canada have in recent years opted to leave, posing a challenge to a country heavily dependent on immigration for population and economic expansion, the Institute for Canadian Citizenship said earlier last month.

A continued long-term focus on economic growth, with over 60% of permanent resident admissions dedicated to the economic class by 2025.

A commitment to uphold the Government of Canada's humanitarian tradition support effort by responding to humanitarian and geopolitical crises around the world. (Courtesy: Asia Pacific Post)

# ஸ்காபரோவில் முதலாவது மருத்துவக் கல்லூரி 200 ஆண்டுகளின் பின்னர் புதிய சகாப்தம்











ஸ்காபரோவில் முதன்முதலாக மருத்துவக் கல்லூரியை உருவாக்க அடித்தளமிட்ட வரலாறு கடந்த மாதம் படைக்கப்பட்டது.

ஸ்காபரோ ஒருங்கிணைந்த மருத்துவ சுகாதார கல்லூரியானது (SAMIH) சுகாதார பாதுகாப்பு வல்லுநர்கள், பயிற்சி மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவ உதவியாளர்கள் மற்றும் உடல்நல சிகிச்சை வல்லுநர்கள் ஆகியோரின் பயிற்சிக் களமாக இருக்கும்.

இம்மருத்துவக் கல்லூரி தொடர்பாக ஒன்றாரியோ மாநில சட்டமன்ற றூஜ்பார்க் தொகுதி உறுப்பினரும் போக்குவரத்து அமைச்சின் இணை அமைச்சருமான விஜய் தணிகாசலம் குறிப்பிடுகையில், “எங்கள் அரசாங்கத்தின் உறுதியான ஆதரவுடன், ஏறத்தாள 200 ஆண்டுகளுக்குப் பின்னர், எங்கள் குடியிருப்பாளர்கள் அனைவரின் நலனுக்காக, ஸ்காபரோவின் சிறந்த சுகாதார பாதுகாப்புக்கான புதிய சகாப்தத்தை தொடங்குகிறோம். இத்திட்டத்தின் மூலம் அடுத்தடுத்து வரும் பல தலைமுறைகளுக்கு சிறந்த மருத்துவ சேவையாற்றுவதற்கான மருத்துவ நிபுணர்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்” என்று தெரிவித்துள்ளார்.

றொரன்றோ பல்கலைக்கழக ஸ்காபரோ வளாகத்தில் இம்மருத்துவ பீடத்திற்கான முதலாம் கட்ட கட்டுமானத் திட்ட ஆரம்பம் கடந்த மாதம் ஆறாம் திகதி இடம்பெற்றது.. இப்பீடத்துக்கான கட்டுமானங்கள் 2026ம் ஆண்டில் நிறைவுபெறும். SAMIH செயற்படத் தொடங்கியவுடன், ஓராண்டிற்கு 30 மருத்துவர், 30 மருத்துவ உதவியாளர், 30 செவிலிய பயிற்சியாளர், 40 உடல்நல சிகிச்சை வல்லுநர்கள் மற்றும் 300 உயிரியல் வல்லுநர்கள் இளங்கலை பட்டதாரிகளாக பயிற்றுவிக்கப்படுவார்கள். இது றொரன்றோ பல்கலைக்கழக ஸ்காபரோ வளாகத்தின் விரிவாக்கப்பட்ட உயிரியல் திட்டத்தையும் உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

---

# கண்டதை மீண்டும்...

இந்த விஸ்வப் பிரசன்னாக் குருக்களை உதாரணமாகப் படித்தாலென்ன?
உலக அரசியல், இந்திய உபகண்டத்தின் போக்கு, சிங்கள பௌத்த மேலாதிக்கம் இவற்றையெல்லாம் கவனத்தில் வைத்து நோக்கும்போது ஆன்மீக வழியில் வரும் அரசியல் ஒன்றுதான் இனிமேல் ஈழத்தமிழரின் விமோசனத்திற்கான வழியாக இருக்குமோ என்று தோன்றுகிறது. நமக்கு ஒரு தலைவரைத் தேடுவது ஒருபுறமிருக்க, முதலில் ஈழநிலப்பரப்பிலும் மலையகத்திலும் வாழும் அனைத்து இந்துக்களையும் இணைக்கும் ஒரு அடையாளம் நம்மத்தியில் அமைய வேண்டும். அந்த அடையாளம் தமிழ்பேசும் முஸ்லிம், கிறிஸ்தவ மக்களால் வெறுக்கப்படாததாயும் இருக்க வேண்டும். அந்த வகையில் பௌத்த சிங்களவருக்கு தலதா மாளிகை இருப்பதுபோல தமிழருக்கு நல்லூர் கந்தசாமி கோவில் ஓர் அடையாளமாக தொடர்ந்து இருக்கட்டும். அதன்பின் நம் வேட்டைத் திருவிழாவிற்கு வருவோம்.

# Key highlights of the Liberals' 2023 fall economic statement

**Finance Minister Chrystia Freeland tabled her fall economic statement on November 21, Tuesday. Here are the highlights.**

— $20.8 billion: New federal spending since the spring budget.

— $488.7 billion: Total government spending for the current fiscal year, through the end of March 2024.

— 1.1 per cent: The real rate of GDP growth for 2023. Growth is expected to decline to 0.4 next year, but the government says it doesn't expect the slowdown to result in a recession.

— $40 billion: The updated deficit for this year.

— $38.4 billion: Next year's projected deficit

— a $3.4-billion increase from the government's previous projection.

— Mortgage relief: The government says it will update its mortgage charter to ensure that financial institutions offer tailored relief and reasonable payments for borrowers.

— Tax break for co-ops: Co-operative housing corporations that provide long-term rental accommodations will be eligible for the removal of the GST on new rental housing.

— Tax break for therapy: The federal government will exempt GST and HST from psychotherapy and counselling services.

— $1 billion: The cost of a new affordable housing fund over three years, beginning in 2025-2026, which the federal government projects will help build 7,000 new homes.

— Up to $7 billion: The proportion of a cleantech economic investment fund being allocated for special contracts intended to give companies the confidence they need to make major investments to lower their greenhouse-gas emissions.

— $309 million: Funding for a new co-operative housing development program, which the government says will go toward a co-developed program that it expects to launch in early 2024.

— $35 million: The projected cost of a public inquiry into foreign interference attempts, including $10 million this year, $22 million in 2024-2025 and $3 million in 2025-2026.

— $50 million: Money the government is proposing to spend over three years, starting next year, to support municipalities in cracking down on short-term rentals. The federal government also intends to deny income tax deductions when short-term rental operators are not complying with provincial and municipal rules.

— Seasonal workers: Up to four additional weeks of regular employment insurance benefits will be available to seasonable workers beginning this year.

Real estate excellence, every time.

Rajmogan Selliah
Sales Representative

Direct: 416 569 3200

Email: srajmogan@gmail.com

Buy | Sell | Lease | Invest

210 - 80 Corporate Drive,
Toronto, ON M1H 3G5
Office: 416 284 5555



Residential, Commercial and Investment Properties

# புலம்பெயர் காய்ச்சல்...

இன்னொருவர் வீட்டில் இன்னொருவரது வளங்களை அனுபவிக்கும் போது வரும் உறவுச் சிக்கல்களை எமது நாட்டில் போர்க்கால வாழ்வில் இடம் பெயர்ந்த வாழ்க்கை புலப்படுத்தி உள்ளது.

விசிட் விசாவில் போய் இன்னொருவர் வீட்டில் ஆறு மாதகாலம் தங்கி இருப்பது என்பது ஏற்கனவே இனிப்பாக இருந்த உறவைக் கசக்கச் செய்கிறது. இவை உறவுச் சிக்கல்கள்.

இன்னொரு பக்கம் பாருங்கள் எமது தாய் நாட்டின் நிலைமையை. எமது மண் மீட்புக்காக, மொழி உரிமைக்காக, தனிநாட்டுக்காகப் போராடி இழந்த உயிர்கள், காணாமல் போனவர்கள் எத்தனை? புலம்பெயர்ந்து போன பல இலட்சம் பேரால் எமது நாட்டின் இன விகிதாசாரத்தில் நாம் பின்தங்கி உள்ளோம்.

பல்கலைக்கழக மாணவர் அனுமதி, அபிவிருத்தி நிதிப் பங்கீடு, மக்கள் பிரதிநிதிகள் தெரிவு, ஆட்சி அதிகாரம் எனப் பல வழிகளிலும் பின்தங்கி உள்ளோம்.

இலங்கைத் தமிழரின் பண்பாட்டுத் தலைநகரான யாழ்ப்பாணத்தில் பதினொரு (11) பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி முறை மூலமாகத் தெரிவு செய்யப்பட்டனர். முன்னாளில் 168 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட போது பதினொரு பேர் ஒரு மாவட்டத்தில் மட்டும் எனும் போது அதன் பலத்தை நினைத்துப் பாருங்கள்.

கொழும்பில் ஆட்சியைத் தீர்மானிக்கும் உரிமையைக் கூடச் சில முறை பெற்றுள்ளோம்.

இப்போது 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் வெறும் ஏழு பேரைத் தான் யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்ப முடியும். அதிலும் சிங்களக் கட்சிக்கு ஒருவர் தெரிவாகின்ற நிலைமை.

போர் காரணமாகவும், பொருளாதாரத் தேவை காரணமாகவும், போரைச் சாட்டியும் புலப்பெயர்வு பெருமளவில் நடந்து முடிந்து விட்டது.

இப்போதும் கனடாப் புலப்பெயர்வு, இலண்டன் மாணவர் விசா முறை, ருமேனியா ஊடாகப் புலப்பெயர்வு எனத் தொடருகின்றது.

நிச்சயமற்ற பயணம், நிச்சயமற்ற வாழ்க்கை, நிச்சயமற்ற பொருளாதாரம் என நிலைமைகள் உள்ளது.

எமது தாய்த் திருநாட்டில் எமது இனத்தின் இருப்பைத் தக்க வைக்க இனத்தின் அரசியல் உரிமைகளை நிலை நாட்ட எமது இருப்பு அவசியமானதல்லவா?

அண்மையில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன் “வடக்குக் கிழக்கிலிருந்து குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து ஏராளம் பேர் மிக அண்மைய மாதங்களாகப் புலம் பெயருகின்றனர். இவர்களைப் புலம் பெயர வேண்டாமென இங்குள்ள எந்தவொரு அரசியல் தலைவர்களும் குரல் கொடுக்கவில்லை” எனக் குற்றம் சாட்டினார்.

இது நூறு வீதம் உண்மை.

சமகால, எதிர்கால தாயக வாழ்வு குறித்து எமது அக்கறை, புரிதல் எவ்வாறு உள்ளது? இவ்வாறு தான் உள்ளது.

போர் முடிந்து பதினான்கு வருடங்கள் கடந்து விட்டது. தாயகத்தில் வாழ்வதற்கான இருப்பு, அடிப்படைகள் குறித்த அக்கறையே எமது முதல்நிலைத் தெரிவாக இருக்க வேண்டும்.

புலம்பெயர்ந்து நிச்சயமற்ற வாழ்க்கையினுள் நுழைந்து தேடிய தேட்டங்களைத் தொலைத்துவிடக் கூடாது.

இது பற்றிய சமூக அக்கறையும் விழிப்புணர்வும் சரியான தெரிவுமே எமக்கு அவசியமானது.

# இயற்கை போற்றும்...

எல்லைகளை முதன்மைப்படுத்தாது ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ எனச் சிந்தித்தனர். இந்த இயல்புகளின் விளைவே பின்னாள்களில் தோன்றிய திருக்குறள்.

இயற்கையே தமிழர்களின் வாழ்வியல் வழிகாட்டி. உணவூட்டிப் போற்றிய இரண்டாம் தாய். நாம் இன்றளவிலும் போற்றி ஒழுகவே - ண்டிய பண்பாட்டு மரபுகளுள் ஒன்று இயற்கையைப் பேணுதலே.




ALL YOUR CATERING NEEDS
CALL 416 - NANTHA 1 ext. 1
416 - 626-8421 ext. 1
FEEL GOOD
Taste Together
நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
INDIAN / CEYLON TAMIL RESTAURANT IN GTA
Kipling & Steeles
(416-NANTHA-1 Ext. 2)
#18 - 5010 Steeles Ave W Etobicoke, ON M9V 5C6
Warden & Finch
(416-NANTHA-1 Ext. 3)
Bridlewood Mall #106 - 2900 Warden Ave, Scarborough, ON M1W 2S8
Middlefield & Steeles
(416-NANTHA-1 Ext. 4)
#2 - 2002 MiddleField Rd Markham, ON L3S 1Y5
(Beside Fresh Food City Super Store)
(416-NANTHA-1 Ext. 5)
#8 - 2200 Brock Rd, Pickering, ON L1X 2R2
Food Court - 6, Majestic City
(416-NANTHA-1 Ext. 6)
2900 Markham Rd, Scarborough, ON M1X 1E6
416 - NANTHA 1 | 416 - 626-8421
www.nantha.com

# கனடா ஈழநாடு நடத்திய 'ஊட்டும் கரங்கள்'

முல்லைத்தீவு அன்பு இல்லக் குழந்தைகளுக்காக கனடா ஈழநாடு பத்திரிகை 12வது ஆண்டாக நடத்திய ஊட்டும் கரங்கள் நிகழ்வு கடந்த அக்டோபர் மாதம் 28ம் திகதி சனிக்கிழமை ஸ்காபரோவில் அமைந்துள்ள ஆர்மீனியன் சென்ரரில் இடம்பெற்றது.

2009 மே மாதம் நடைபெற்ற இறுதிக் கொடிய யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் உயிர்களைக் காப்பாற்றியவரும், போரில் காயமடைந்தும் இராணுவ முகாம்களில் மாதக்கணக்கில் தடுத்து வைத்து சித்திரவதைக்கு உள்ளானவருமான டாக்டர் வரதராஜா விழாவின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

"இந்த அரங்கில் முல்லைத்தீவு அன்பு இல்லம் என்பதைக் காணு கின்றபோது கனடாவில் எமது தேசியத் தலைவரது எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்கப்படுவதை நினைத்துப் பெருமை கொள்ளுகின்றேன். அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் என்பவை தலைவரால் உருவாக்கப்பட்டவை. அவருக்கு எத்தனை பாரிய வேலைகள், சுமைகள் இருந்தாலும் மாதத்தில் சில நாட்களை அந்தக் குழந்தைகளோடு செலவு செய்வதை நான் அவதானித்துள்ளேன். அவரது கனவு நனவாக பாடுபட்டு வரும் ஈழநாடு பத்திரிகைக்கு எனது பாராட்டுக்கள், உங்கள் ஆதரவு இந்தக் குழந்தைகளை வாழ வைக்கும்" என்று டாக்டர் வரதராஜா இங்கு உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

மங்கல விளக்கேற்றல், தேவாரம், கனடிய தேசிய கீதம், தமிழ் வாழ்த்து ஆகியவைகளைத் தொடர்ந்து திருமதி தாட்சாயினி பிறின்ஸ் வரவேற்புரை நிகழ்த்தினார். வழமைபோன்று திரு. பா. -ஞானபண்டிதர் நிகழ்ச்சிகளை சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

கனடா மண்ணில் சமூக சமயப் பணியாற்றி வரும் கனடா ஐயப்பன் இந்து ஆலய குருசாமி சிவத்திரு சுப்பிரமணியம் நாகலிங்கம் அவர்களும், சமூகப்பணி, ஊர்ப்பணி என்பதோடு மானுடரின் இறுதி நிகழ்வில் அவர்களின் குடும்ப உறுப்பினராகவே தம்மை உட்படுத்தி அந்திமச் சடங்குகளை எந்தவித பாகுபாடுமின்றி ஒழுங்குபடுத்தி பிரதி உபகாரம் எதனையும் எதிர்பாராமல் நிறைவேற்றிவரும் திரு. சோம. சச்சிதானந்தன் அவர்களும், கனடா மண்ணில் 25 ஆண்டுகளாக இசைப்பணியாற்றிவரும் மெகா ரியூனஸ் இசைக்குழுவின் தலைவர் அரவிந்தன் மகேசன் அவர்களும் விழாவில் மதிப்பளிக்கப்பட்டனர்.

தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த பின்னணிப் பாடகர் முகேஷ், பின்னணிப் பாடகி சுர்முகி ஆகியோருடன் கனடிய தமிழ்ப் பாடகர்கள் சபேசன், ரம்மியா, சரிகா ஆகியோரின் இன்னிசை மாலை சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது. இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் கனடாவின் பெயரில் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டு வரும் புதிய கட்டிடத்திற்கான காசோலை அரங்கத்தில் வைத்து ஈழநாடு ஆசிரியரிடம் கையளிக்கப்பட்டது.











# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

**உங்கள் இல்லங்களை மாளிகையாக்கிட**

அழையுங்கள்
**கேதா**

**தமது சிறப்பான சேவையினால் தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்**

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - FRIDAY**
**(416) 266-5161**
(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# போசாக்கு உணவு

போசாக்குள்ள உணவு என்பது என்ன? இனிப்பு, எண்ணெய், நொறுக்குத் தீனி போன்றவற்றை மிகக் குறைவாக உண்ணல். மாப்பொருள் உணவை அளவோடு உண்ணல், புரத உணவுகளை தேவையான அளவில் உண்ணல், காய்கறி மற்றும் பழவகைகளை அதிகம் உண்ணல் எனச் சொல்லலாம்.

தினமும் ஒவ்வொரு பங்கும் 80 கிராம் நிறையுள்ளதாக 5 பங்கு அளவில் காய்கறிகளையும் பழவகைகளையும் உணவில் சேர்க்க வேண்டும் என்பது பொதுவாக ஏற்கப்பட்ட கருத்தாகும்.

எத்தகைய காய்கறி உணவுகள் நீரிழிவு வராமல் தடுக்க உதவும் என்பது அடுத்த கேள்வியாக இருக்கும்.

மாப்பொருள் குறைந்த அளவுள்ள காய்கறிகள் நல்லது. கிழங்கு வகைகளில் மாப்பொருள் உள்ளதாயினும் அவற்றில் நார்பொருளும் நீர்ச்சத்தும் அதிகம் இருப்பதால் அளவோடு உண்பதில் தவறில்லை. ஏனைய காய்களிகளில் மாப்பொருள் குறைவாகவும், நார்ப்பொருள் அதிகமாகவும் உள்ளதால் நல்லது.

இலைவகைகள் மேலும் சிறந்தவை என்கிறார்கள்.

பச்சை நிறமான இலைவகைகள் அதிகளவு உட்கொள்ளும் உணவு முறையானது நீரிழிவு ஏற்படுவதற்கான சாத்தியத்தைக் குறைக்கிறது என ஒரு ஆய்வு கூறியது. ஆறு ஆய்வுகளின் முடிவுகளை மீள்பரிசோதனை செய்த போது இது தெரிய வந்ததாம்.

ஏனைய காய்கறிகள் உண்பவர்களை விட அதிகளவு பச்சை நிறமான இலைவகைகளை உண்பவர்களுக்கு மட்டுமே நீரிழிவு வருவதற்கான சாத்தியம் 14 சதவிகிதம் குறைவு என்று அது கூறியது. இது 13 வருடங்களாக 223,000 பேரிடையே செய்த அவதானிப்பின் முடிவு.

ஆனால் ஏனைய வகை காய்கறிகளையும் பழங்களையும் அதிகம் உண்பவர்களிடேயே இந்தச் நீரிழிவுக்கு எதிரான சாதகமான பலன் கிடைப்பதாகத் தெரியவில்லை. இதன் அர்த்தம் ஏனைய வகை காய்கறிகள் பழங்கள் பயனற்றவை என்பது அல்ல. ஏனைய பல ஆராய்ச்சி முடிவுகள் எல்லாப் பழவகைகளும், காய்கறிகளும் நீரிழிவைத் தடுப்பதில் பங்களிப்பதுடன், இருதயநோய்களுக்கான சாத்தியத்தையும் குறைப்பதாகக் கூறுகின்றன. ஆயினும் இலைவகை உணவுகளின் பங்களிப்பு அதிகம் என்பது இப்பொழுது தெரியவந்துள்ளது.

இலைவகை உணவுகளின் நற்பயனுக்குக் காரணம் என்ன? ஒட்சிசனெதிரிகள் காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். பசுமையான பச்சை இலைகளில் பீற்றாகரோட்டின், பொலிபீனோல்ஸ், விட்டமின் சீ போன்ற ஒட்சிசனெதிரிகள் மற்றும் மக்னீசியம் போன்ற தாதுப்பொருட்களும் தாராளமாக இருப்பதே காரணம் எனலாம்.

பசிய இலை வகை உணவுகளின் போசாக்கு இலைவகைகள் மிகக் குறைந்தளவு கலோரிப் பெறுமானம் உள்ள உணவுகளாகும். அவற்றிலுள்ள மாப்பொருள்களானது நார்ப்பொருள்களிடையே அடைபட்டு இருப்பதால் எளிதில் சமிபாடடைவதில்லை. இதனால் நீரிழிவு நோயாளர்களின் இரத்த குளுக்கோஸ் அளவு அதிகரிப்பதைக் குறைக்கினறன.

இரும்பு, கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம் போன்ற கனியங்கள் உண்டு.

விட்டமின் னு வகைகளுடன், விட்டமின்கள் K, C, E ஆகியவை நிறையக் கிடைக்கின்றன. ஒரு கப் சமைத்த இலையுணவு ஒரு மனிதனுக்கு தினசரி தேவைப்படும் விட்டமின்கள் K யைவிட 9 மடங்கு அதிகமாகக் கொடுக்கும் எனத் தெரிகிறது.

பீட்டாகரோட்டின், லியுடின் (beta-carotene, lutein, and zeaxanthin) போன்ற பைட்டோநியுரியன்டசை (phytonutrients) இலைவகை உணவுகள் தருகின்றன. இவை எமது உடற்கலங்கள் சேதமாவதைத் தடுக்கின்றன. வயது அதிகரிப்பால் ஏற்படும் பார்வை இழப்பை (Age related macular degemeration) தடுப்பதிலும் இவை உதவுகின்றன.

கொலஸ்டரோல் குறைப்பு, இருதய நோயிலிருந்து பாதுகாப்பு ஆகியவற்றிற்காக இப்பொழுது ஒமேகா 3 (Omeg 3 Fat) என்ற கொழுப்பை பலரும் பயன்படுத்துகிறார்கள். இது பெருமளவு ஆழ்கடல் மீன்களிலிருந்தே பெறப்படுகின்றது. ஆயினும் தாவர இலை உணவுகளிலும் இது சிறிதளவு காணப்படுகிறது.

பசுமை நிறமான இலை வகைகளில் விற்றமின் K அதிகம் என்றோம். அதன் பலாபலன்கள் என்ன?

குருதி உறைதலைக் கட்டுப்படுத்துகின்றது. மாரடைப்பு, பக்கவாதம் போன்றவை ஏற்படுவதற்கு குருதி உறைதல் முக்கிய காரணமாகும். மருத்தவ ரீதியாக இதைத் தடுப்பதற்கே குறைந்த அளவு அஸ்பிரின் (75-100mg) மற்றும் குளபிடோகிரில் போன்ற மருந்துகளை நீண்ட கால அடிப்படையில் கொடுக்கிறார்கள். தாவர இலை உணவுகளில் உள்ள விற்றமின் கே இயற்கையான பாதுகாப்பைக் கொடுக்கும்.

விற்றமின் கே ஒஸ்டியோபொரோசிஸ் நோயிலிருந்து பாதுகாப்பளிக்கிறது. இன்று வயதான பலரும் முக்கியமாக பெண்கள் இதனால் பாதிக்கப்படுவது தெரிந்ததே. தாவர இலை உணவுகளை தினமும் உபயோகித்து வந்தால் ஒஸ்டியோபொரோசிஸ் வருவதிலிருந்தும் பாதுகாப்பு கிடைக்கும். நீரிழிவு ஏற்படாமல் தடுக்கவும் உதவும்.

அழற்சியைத் தடுக்கும் குணம் விற்றமின் கே க்கு இருப்பதால் மூட்டு நோய்களிலிருந்து பாதுகாக்கும்.

இரத்தக் குழாய்களில் கொழுப்புப் படிவதை தடுக்கும் ஆற்றலும் விற்றமின் கே க்கு உண்டு.

எனவே நீரிழிவைத் தடுப்பதற்காக மட்டுமின்றி மேற்கூறிய பல பலன்களும் கிட்டும் என்பதால் தினமும் உணவில் பசிய இலை உணவைச் சேர்த்துக் கொள்வது அவசியமாகும்.


OIL CHANGE SPECIAL $34.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது
இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca


உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high with your thoughts
PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

ISSN 1206-0585

